இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 44 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 05 – வெள்ளிக்கிழமை 22 செப்டம்பர் 2023 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 44 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 05 - Friday 22 September 2023 - Madurai 10 Pages ₹ 5.00

## மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும்

# சாலைப் பணிகளின் முன்னேற்றம் : வாரம்தோறும் அறிக்கை தர வேண்டும்!

## சென்னையில் சாலைப் பணிகளைப் பார்வையிட்ட பின் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.9.2023) சாலைப் பணிகளை பார்வையிட்ட பின்னர், முகாம் அலுவலகத்தில், சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களில் சாலை சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சென்னை மெட்ரோ இரயில் மேலாண்மை இயக்குநர் மு.அ. சித்திக், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், சென்னை மெட்ரோ இரயில் திட்ட இயக்குநர் அர்ஜுனன், முதன்மை பொது மேலாளர் அசோக் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, செப். 22-

**பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பெருங்குடி, வேளச்சேரி மற்றும் ஆலந்தூர் பகுதிகளில் ரூ.7.14 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள் ஆய்வு செய்தபின் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து வாரந்தோறும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, பணி முன்னேற்றம் குறித்த அறிக்கை அளிக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.9.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ராம் நகர் 7வது குறுக்கு தெரு, 3வது பிரதான சாலை மேற்கு பகுதி மற்றும் ராம் நகர் 3வது பிரதான சாலை கிழக்கு பகுதி ஆகிய இடங்களில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், நெடுஞ்சாலைத் துறை சார்பில் மணப்பாக்கம் - கொளப்பாக்கம் கிருகம்பாக்கம் சாலையில் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளையும், ராமாபுரம் - திருவள்ளுவர் சாலையில் 2 கோடியே 23 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற சாலைப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### மெட்ரோ பணிகளை விரைந்து முடிக்க அறிவுரை!

மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து வாரந்தோறும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, பணி முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அளிக்குமாறு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், சென்னை மெட்ரோ இரயில் பணிகளை போக்குவரத்திற்கு இடையூறில்லாமல் மேற்கொள்வதற்கும், பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.9.2023 அன்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் பேசும் போது, சென்னை, புறநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாலைகள் பழுதடைந்து உள்ளது என்றும், தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டே இருக்கின்றன என்றும், பல்வேறு மாவட்டங்களிலும், சாலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்திருந்தார்.

வேண்டும் என்றும், இதனை கள ஆய்வு செய்தும், பணி முன்னேற்றம் கூட்டங்கள் நடத்தியும் உறுதி செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இந்த வாரத்தில் சென்னையில் சாலைப் பணிகளை ஆய்வு நடத்தவுள்ளேன் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மேலும், சுற்றுப்பயணம் செய்ய அனைத்து மாவட்டங்களிலும், இது தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்ய முடிவு செய்திருப்பதாகவும், சாலைப்பணிகள் மேற்கொள்ளும் துறைகள் அனைத்தும் துரிதமாக, தரமாக பணிகளை மேற்கொண்டு முடிக்கவேண்டும் என்றும் கண்டிப்போடு தெரிவித்திருந்தார்.

**சாலைப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், அனைத்து பணிகளையும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக தாமதப்படுத்தாமல் முடிக்கப்பட வேண்டும் என்றும், நகராட்சி நிர்வாகத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள், போக்குவரத்து காவல்துறை, மின்வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம், தொலைதொடர்புத் துறை மற்றும் சென்னை மெட்ரோ இரயில் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி, சாலைப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.**

மேலும், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரியப் பணிகள், மெட்ரோ இரயில் பணிகள், மின்வாரியப் பணிகள் என பல்வேறு பணிகள் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாக பழைய சாலைகள் நிலை போதிய பராமரிப்பு இல்லாமல் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள், இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றும், நம் மாநில சாலைகள் தரமானதாக, மக்கள் பாராட்டப்படும் வகையில் அமைக்கப் படவேண்டும் என்றும் அன்றைய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

### சாலைப் பணிகள் குறித்து நேரடி ஆய்வு நடத்த முதல்வர் முடிவு!

அமைச்சர் பெருமக்களும், அரசு செயலாளர்களும், துறைத் தலைவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த

அதன் அடிப்படையில் நேற்று, முதலமைச்சர் அவர்கள் பெருங்குடி மண்டலம், ராம் நகர் பகுதிகளிலும், நெடுஞ்சாலைத் துறை சார்பில் மணப்பாக்கம் - கொளப்பாக்கம் - கிருகம்பாக்கம் சாலை மற்றும் ராமாபுரம் - திருவள்ளுவர் சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

**பெருங்குடி மண்டலம், ராம் நகரில் 7வது குறுக்கு தெரு, 3வது பிரதான சாலை மேற்கு பகுதி** மற்றும் கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்தல்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## கர்நாடக அரசின் கோரிக்கை நிராகரிப்பு!

# காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவை அமல்படுத்துக!

## கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, செப். 22-

**கர்நாடக அரசின் கோரிக்கையை நிராகரித்து காவிரி நீர் திறப்பு விவகாரத்தில் ஒழுங்காற்று குழு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவுகளை செயல்படுத்த வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

காவிரி நீர் திறப்பு ஒழுங்காற்று மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் ஏற்கனவே கூட்டிய கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் அதிகாரிகள் பங்கேற்று தமிழ்நாட்டிற்குத்தர வேண்டிய நீரை முறையாக வழங்க வேண்டும் எனவும், காவிரி டெல்டா பகுதிகளில் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும் வலியுறுத்தினர். ஆனால் கர்நாடக அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தது.

காவிரி நதி நீர் ஒழுங்குமுறை ஆணையம் தமிழ்நாட்டிற்கு உடனடியாக 5,000 கன அடி நீரை திறந்து விட வேண்டும் என கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டது. அதையும் கர்நாடக அரசு ஏற்க மறுத்தது.

இதனையடுத்து கடந்த 19ந் தேதி நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழ்நாட்டு எம்.பி.க்கள் குழு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி புதுடெல்லி சென்று ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சரைச் சந்தித்து, தமிழ்நாட்டிற்குத் தேவையான தண்ணீரைத் திறந்து விட கர்நாடக அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தியதுடன், காவிரியில் இதுவரை 36 டி.எம்.சி. நீர் மட்டுமே தமிழ்நாட்டுக்கு கிடைத்திருப்பதாகவும் 107 டி.எம்.சி. பற்றாக்குறை உள்ளது எனவும் எடுத்துரைத்தது. இதையும் கர்நாடக அரசு ஏற்கவில்லை. இதனையடுத்து உச்சநீதிமன்றத்தை தமிழ்நாடு அரசு நாடியது.

கர்நாடக அரசு காவிரி நீர் திறப்பு விவகாரம் தொடர்பான வழக்கு, நேற்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீர் திறப்பு தொடர்பாக ஒழுங்காற்று குழு மற்றும் காவிரி ஆணையம் பிறப்பித்த உத்தரவுகளை கர்நாடக அரசு செயல்படுத்தவில்லை என்றும், காவிரி ஆணைய உத்தரவுகளை மதிக்காமல் கர்நாடக அரசு குறைந்த அளவு தண்ணீரையே திறக்கிறது என்றும் தமிழ்நாடு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உடனடி தேவைகளுக்காக மட்டுமே கர்நாடகாவிடம் இருந்து தண்ணீர் கேட்பதாகவும், ஆதலால் காவிரியில் 12 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது.

வாதத்தைக் கேட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், காவிரி நீர் திறப்பு தொடர்பாக காவிரி ஒழுங்காற்று குழு, காவிரி ஆணைய உத்தரவுகளை செயல்படுத்த வேண்டும் என்று கர்நாடகாவுக்கு உத்தரவிட்டனர். மேலும், நீர் திறப்பு தொடர்பாக காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கர்நாடகாவின் கோரிக்கையை நீதிபதிகள் நிராகரித்து விட்டனர்.

### அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

இந்நிலையில் நேற்று சென்னை கோட்டூர்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கர்நாடகா நீர் தர வேண்டும் என்பதற்காகவே உச்சநீதிமன்றத்தில் அவசர வழக்கு போடப்பட்டுள்ளதாக கூறினார். இனி பேச்சுவார்த்தை என்பதே கிடையாது என்றும், எதுவாக இருந்தாலும் உச்ச நீதிமன்றம் மூலம்தான் தீர்வு காணமுடியும் என தெரிவித்த அமைச்சர் துரைமுருகன், காவிரி நதிநீர் விவகாரத்தில் இரு மாநில பேச்சுவார்த்தையோ, பிரதமர் தலையிடவோ தேவையில்லை என்றும் கூறினார்.

உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. ஆஜராகி வாதாடினார்.

# சில மாற்றங்களுடன் மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை அமல்படுத்த வேண்டும்!

## மாநிலங்களவையில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தல்!

*புதுடெல்லி, செப். 22-*

*மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவில் மாற்றங்கள் உடனே செய்யப்பட வேண்டும் எனவும், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவில் ஏன் மாற்றம் செய்ய முடியாது? என்றும் மசோதாவை பெயரளவில் வைத்துக் கொண்டு இழுத்தடிக்க நோக்கமா? எனவும், மாநிலங்களவையில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பினார்.*

*மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவில் மாற்றங்கள் செய்யப்பட்டு, அதனை*



*உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.*

*நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதா மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட நிலையில், நேற்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.*

*இதன் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மகளிர் இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.*

*பஞ்சாயத்து ராஜ், ஜில்லா பஞ்சாயத்து மசோதாக்களில் மாற்றங்கள் செய்யப்படும்போது, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவில் ஏன் மாற்றம் செய்ய முடியாது? என்றும், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை பெயரளவில் வைத்துக் கொண்டு இழுத்தடிக்க நோக்கமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.*

*33% இடஒதுக்கீடு மசோதாவில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும்,*

*அதனை இப்போதே செய்யவேண்டும் எனவும் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தினார்.*

## முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் என அறிவித்த நிலையில்

# ‘நீட்’ நுழைவுத் தேர்வுக் கட்டணம் மூலம் ஒன்றிய அரசு ஆண்டுக்கு ரூ.100 கோடி வசூல்!

## பணம் வசூலிக்கத்தான் தேர்வா என மாணவர்கள் வேதனை!

*சென்னை, செப்.22-*

*முதுநிலை மருத்துவப்படிப்புகளுக்கு தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ள நிலையில், நீட் நுழைவுத் தேர்வு கட்டணம் மூலம் ஒன்றிய அரசு ஆண்டு தோறும் 100 கோடி ரூபாய் வசூல் செய்து வருவது அம்பலமாகி உள்ளது.*

*இளநிலை மருத்துவப் படிப்புகள் மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளில் சேருவதற்கு தகுதித்தேர்வை தேசிய தேர்வு முகமை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. நாடு முழுவதும் பிளஸ் 2 முடித்த மாணவ-மாணவிகள் நீட் தேர்வு எழுதி அதன் மூலம் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படித்து வருகின்றனர். இந்த நிலையில், நீட் முதுநிலை தேர்வில் தகுதி மதிப்பெண் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டுள்ளது.*

*நீட் தேர்வில் தகுதி மதிப்பெண் ஜீரோவாக எடுத்திருந்தாலும் எம்.டி, எம்.எஸ்., படிப்புகளுக்கான கலந்தாய்வில் பங்கேற்கலாம் என்று ஒன்றிய அரசின் மருத்துவ கலந்தாய்வுக் குழு அறிவித்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பாணை, நீட் தேர்வின் சூழ்ச்சியை அம்பலமாக்கியுள்ளது. தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் எனில், தேர்வு எதற்கு என்று பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பி உள்ளனர். இந்நிலையில் ஒவ்வொரு ஆண்டும் நீட் முதுநிலை தேர்வு மூலம் ஒன்றிய அரசு 100 கோடி ரூபாய் மாணவர்களிடமிருந்து வசூல் செய்து வருவது தெரியவந்துள்ளது. முதுநிலை மருத்துவப்படிப்புகளுக்கான நீட் தேர்வுக்கு 4 ஆயிரத்து 250 ரூபாய் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு 765 ரூபாய் ஜி.எஸ்.டி வரியைச் சேர்த்து மாணவர்கள் 5 ஆயிரத்து 15 ரூபாய் கட்டணமாக செலுத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு மட்டும் 2 லட்சத்து 8 ஆயிரத்து 898 மாணவர்கள் முதுநிலை மருத்துவப்படிப்புக்கான நீட் தேர்விற்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களிடமிருந்து கட்டணமாகவும், ஜி.எஸ்.டி வரியாகவும் சராசரியாக 100 கோடி ரூபாயை ஒன்றிய அரசு வசூலித்துள்ளது. நீட் தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் என்ற நிலையில், மாணவர்களிடம் இருந்து பணம் வசூலிக்கவா நீட் தேர்வு நடத்தப்படுகிறது என்று மாணவர்கள் கொந்தளிப்புடன் கேள்வி எழுப்பி உள்ளனர்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 22-09-2023

# மகளிருக்கு அதிகாரமும் தி.மு.க.வும்

மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை இந்திய நாடாளுமன்ற மக்களவை ஆதரித்து நிறைவேற்றி விட்டது. மகளிருக்கு நாடாளுமன்ற - சட்டமன்றத் தொகுதிகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்குவதன் மூலமாக, அதிகாரம் மிகுந்த பதவிகளுக்கு அவர்கள் வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மகளிருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்த பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும் -**

**மகளிருக்கு நாடாளுமன்ற - சட்டமன்றங்களில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை மாநிலங்களவையில் நிறைவேற்றிய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் இந்த இடத்தில் நினைவுகூரத் தக்கவர்கள்.**

**தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். இவர்கள் மூவருக்கும் பெண் குலம் மட்டுமல்ல, மனித குலம் நன்றிக் கடன்பட்டுள்ளது.**

1996-ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். 474 மாநகராட்சி வார்டுகளில் பெண்களுக்கு 161 - 28 மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர் பதவிகளில் பெண்களுக்கு 10 - 649 மாவட்டப் பஞ்சாயத்து வார்டுகள் பதவிகளில் பெண்களுக்கு 242 - 106 நகராட்சித் தலைவர்கள் பதவிகளில் பெண்களுக்கு 35 என்றும் - முதன்முதலாக தமிழ்நாட்டில் வழங்கியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதுதான் இன்று 50 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மேயர் பொறுப்புகளில் 11 பதவி இடங்களை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து இந்த உரிமையை நிலைநாட்டி இருக்கிறார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மொத்தம் உள்ள இடங்கள் 21 என்றால் அதில் 11 இடங்கள் பெண்களுக்குத் தரப்பட்டன. 9 மாநகராட்சி மேயர் பதவியானது பெண்கள் (பொது) பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியலின பெண்களுக்கு 2 மேயர் பதவிகள் தரப்பட்டுள்ளது. பட்டியலின ஆண் அல்லது பெண்ணுக்கு ஒரு இடம் தரப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் 1971 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் காமாட்சி ஜெயராமன் என்ற பெண் மேயராக இருந்துள்ளார். ஐம்பது ஆண்டுகள் கழித்து இப்போது வணக்கத்துக்குரிய மேயராக ப்ரியா செயல்பட்டு வருகிறார். பெண் இனத்துக்கு அதிகாரப் பரவலை மிகச் சரியாக திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வருவதன் அடையாளம் ஆகும்.

இதனையே நாடாளுமன்ற - சட்டமன்றங்களிலும் கொண்டு வர கழகம் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வந்துள்ளது.

★ 2016-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி மகளிர் நாள் அன்று நாடாளுமன்றத்தின் மக்களவை - மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த பெண் எம்.பி.க்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இதற்காகக் குரல் கொடுத்தார்கள்.

★ 1996-ஆம் ஆண்டு தி.மு.க அங்கம் வகித்த ஒன்றிய அரசில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா முதன்முதலாக தாக்கல் செய்யப்பட்டது.

★ 2005-ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற மண்டல மாநாட்டில் மகளிர் இடஒதுக்கீட்டுக்காக தீர்மானம் நிறைவேற்றினோம். அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பேரணி நடத்தினோம்.

★ 2005-ஆம் ஆண்டும் தி.மு.க. இடம்பெற்ற ஒன்றிய காங்கிரசு அரசு இதனைத் தாக்கல் செய்தது.

★ 2007-ஆம் ஆண்டு கழக உயர்நிலை செயல்திட்டக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம்.

★ 2007-ஆம் ஆண்டு சூலை 16,17 ஆகிய நாட்களில் கடலூரில் நடைபெற்ற தி.மு.க. மகளிரணி மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றினோம்.

★ காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் நீண்ட நாள் முயற்சியின் விளைவாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 2010-ஆம் ஆண்டு மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதி நாடாளுமன்ற மாநிலங்களவையில் மகளிர்இடஒதுக்கீடுமசோதாதாக்கல்செய்யப்பட்டுமறுநாள்நிறைவேற்றப்பட்டது.

★ பிரதமர் நரேந்திரமோடிக்கு 24.11.2014 அன்று தலைவர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

★ பிரதமர் நரேந்திரமோடி ஆட்சிக்கு வந்ததும், 'மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்ற முன்வர வேண்டும்' என்று அன்றைய கழகப் பொருளாளர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். 21.8.2014 அன்று சென்னை மணவழகர் மன்ற முத்தமிழ் விழாவில் பேசும் போது, 'மத்தியில் ஒரு புதிய ஆட்சி வந்திருக்கிறது. அந்த ஆட்சி இதனைச் செய்யவேண்டும்' என்று வலியுறுத்தினார்.

★ 2016-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி மகளிர் நாள் அன்று நாடாளுமன்றத்தின் மக்களவை - மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த பெண் எம்.பி.க்கள் அனைவரும் சேர்ந்து இதற்காகக் குரல் கொடுத்தார்கள்.

★ அப்போது தி.மு.க. செயல்தலைவர் பொறுப்பில் இருந்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.3.2017 அன்று பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதி வலியுறுத்தி இருக்கிறார்கள்.

★ 2017-ஆம் ஆண்டு தி.மு.க சார்பில் மகளிரணிச் செயலாளரும், அப்போதைய மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி தலைமையில் டெல்லியில் பேரணி நடத்தினோம். 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை அமல்படுத்த வலியுறுத்தி இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

★ 2018-ஆம் ஆண்டு உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் பேசிய தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'மகளிருக்கன 33 சதவிகித இடஒதுக்கீடு சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் சூழலை உருவாக்குவோம்' என்று பேசினார்கள்.

"எனது அருமைத் தங்கை கனிமொழி அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்த மகளிர் தின விழாவில் சிறப்பு விருந்தினராக மாநிலங்களவை உறுப்பினர் ரேணுகா சவுத்ரி பங்கேற்றிருக்கும் இந்த விழாவின் மூலமாகக் கேட்க விரும்புவது 'TIME IS NOW'. நாளைய தினம் பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்க இருக்கிறது. அதில் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை நிறைவேற்ற வேண்டும். அதுதான் நீங்கள் மகளிருக்குச் செய்யும் மரியாதையாக அமைந்திட முடியும்" என்று பிரதமருக்குக் கோரிக்கை வைத்தார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

★ மகளிர் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று கடந்த 16 ஆம் தேதி நடந்த தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**- திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட ஜனநாயக சக்திகளின் தொடர் வலியுறுத்தலின் காரணமாக மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதனை வரவேற்போம்.**

குறிப்பு: இதில் பா.ஜ.க.வின் கபட வேடத்தை நாளை பார்க்கலாம்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.9.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ராம் நகர் 7-வது குறுக்கு தெரு, 3-வது பிரதான சாலை மேற்குப் பகுதி மற்றும் ராம் நகர் 3-வது பிரதான சாலை கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் டாக்டர் ஜி.எஸ். சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

'நீட்' தேர்வால் பலன் இல்லை என்று ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டுள்ளது!

# 'நீட்' பலிபீடம் கொண்டு மாணவர்களின் உயிர்களைப் பறிக்கும் - ஒன்றிய பா.ஜ.க. அரசை அகற்றியாக வேண்டும்!

## சமூக வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, செப்.22-

'நீட்' தேர்வினால் பலன் ஏதும் இல்லை என்பது போல, ஒன்றிய பா.ஜ.க. அரசு, முதுநிலை மருத்துவப் படிப்புக்கான தகுதி மதிப்பெண்கள் குறித்து நேற்று முன்தினம் அறிவிக்கை ஒன்றினை, வெளியிட்டுள்ளது.

இவ்வறிவிப்பினையொட்டி சமூக வலைதளப் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நீட் என்ற பலி பீடத்தைக் கொண்டு உயிர்களைப் பறிப்பதற்காகவே இந்த ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை அகற்றியாக வேண்டும்!" என்று சூளுரைத்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நீட் தேர்வின் பலன் என்ன என்றால் '0' தான் என்பதை ஒன்றிய பா.ஜ.க அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது!**

**முதுநிலை மருத்துவப் படிப்புக்கான தகுதி மதிப்பெண் '0' தான் என்று வரையறுப்பதன் மூலமாக NEET என்றால் National Eligibility Cum Entrance Test என்பதில் உள்ள Eligibilityக்குப் பொருள் கிடையாது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டு விட்டார்கள். "கோச்சிங் சென்டர்களில் சேருங்கள், நீட் தேர்வுக்கு பணம் கட்டுங்கள், போதும்" என்றாகி விட்டது.**

**NEET = 0 என்றாகி விட்டது. இதைத்தான் நாங்கள் இத்தனை ஆண்டுகளாகச் சொல்லி வந்தோம். எத்தனை உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இரக்கமே இல்லாமல் இருந்துவிட்டு இப்போது இப்படி ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள்.**

**NEET என்ற பலிபீடத்தைக் கொண்டு உயிர்களைப் பறிப்பதற்காகவே இந்த பா.ஜ.க ஆட்சியை அகற்றியாக வேண்டும்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டு வீரர்

## ஆர்.பரிதி விக்னேஸ்வரனுக்கு ரூ. 2 இலட்சம் நிதி!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 22-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர்.பரிதி விக்னேஸ்வரனை நேற்று முன்தினம் (20.09.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சம் நிதியுதவியினை வழங்கினார்.

மதுரை மாவட்டம், கோச்சடை பகுதியைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர். பரிதி விக்னேஸ்வரன் கோயம்புத்தூரில் உள்ள ஶ்ரீஈஸ்வர் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்துள்ளார். இவர் ஜூடோ விளையாட்டில் தேசிய அளவில் கடந்த 2023ஜூலை மாதம் கர்நாடக மாநிலம், பெல்லாரியில் நடைபெற்ற தேசிய கேடட் ஜூடோ போட்டியில் (National Cadet Judo Championship) கலந்து கொண்டு ஐந்தாம் இடம் பெற்றுள்ளார். மேலும், மாநில அளவிலான போட்டிகள் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப்பதக்கங்கள் மற்றும் பல்வேறு பதக்கங்களை வென்றுள்ளார்.

இவர் கடந்த 26/07/2023 அன்று மதுரையில் ஜூடோ பயிற்சிக்காகச் செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்டதில் இடது காலில் ஒரு பகுதியை இழந்துள்ளார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்குச் சென்றார். பாதிக்கப்பட்ட விளையாட்டு வீரரை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சத்திற்கான நிதியுதவியினை வழங்கினார்.



# காலத்தால் அழிக்க முடியாத ஒரு கருவூலத்தை கலைஞருக்காக உருவாக்கிய விகடன்!

# நல்லவைகளை வரவேற்பதும் - அல்லாதவைகளை விமர்சிப்பதும்தான் பத்திரிகை தர்மம்!

## விகடன் குழுமத்தின் ‘கலைஞர் 100 – விகடனும் கலைஞரும்’ நூல் வெளியீட்டு விழாவில் பத்திரிகை – ஊடகத் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, செப். 22 -**

**நல்லவைகளை வரவேற்பதும் - அல்லாதவைகளை விமர்சிப்பதும்தான் பத்திரிகை தர்மம் என விகடன் குழுமத்தின் ‘கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்’ நூல் வெளியீட்டு விழாவில் பத்திரிகை - ஊடகத் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -**

உரையினைத் தொடங்குவதற்கு முன்னால், வரவேற்புரை ஆற்றியிருக்கக்கூடிய சீனிவாசன் அவர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கக்கூடிய உரிமையோடு எடுத்து வைத்திருக்கக்கூடிய, நம்பிக்கையோடு எடுத்து வைத்திருக்கக்கூடிய, அவருடைய கோரிக்கைக்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அவர் எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### நிபுணர்கள் அடங்கிய தேர்வுக் குழு!

நாங்கள் ஆட்சிக்கு வரும் முன்னர் இந்த நூல்கள் வாங்கக்கூடிய விஷயத்தில் நடந்திருக்கக்கூடிய பல்வேறு தவறுகள் இங்கே சொல்லமுடியாது. சொல்வதும் முறையல்ல. ஆனால் அவைகள் எல்லாம் சரிசெய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. சரிசெய்வதற்கே இவ்வளவு நாட்கள் ஆகியிருக்கிறது. அதற்குள் நான் போக விரும்பவில்லை. சீனிவாசன் சொன்னது போன்று ஒளிவு மறைவற்ற நூல்களைத் தேர்வு செய்ய ஆன்லைன் வழியாக விண்ணப்பங்கள் பெற்று அதனை தேர்வு செய்ய நிபுணர்கள் அடங்கிய தேர்வுக்குழு அமைப்பதற்கான பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூடுதலாக, இன்னொரு தகவல். கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் நூல்கள் வாங்குவதற்கு 190 உறுப்பினர்கள் பரிந்துரைக்க, 20 துறை சார்ந்த நிபுணர்கள் தேர்வு செய்து மூன்றரை இலட்சம் புத்தகத்தை 50 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நான் மெய் மறந்துபோனேன்!

‘கலைஞர் 100 – விகடனும் கலைஞரும்’ என்ற புத்தகத்தை நாங்கள் தயாரித்திருக்கிறோம், அதற்கு நீங்கள் உங்களுடைய அணிந்துரையை வழங்கிட வேண்டும் என்று என்னிடத்தில் கோரிக்கை வைத்தார்கள். இந்தப் புத்தகத்தை எனக்கு அனுப்பி வைத்தார்கள். அதைப் பார்த்ததும் நான் மெய் மறந்து போனேன். மெய் சிலிர்த்துப் போனேன். மிகப் பிரமிப்பாக இருந்தது.

இப்போது எனக்கு இருக்கக்கூடிய கவலையெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்து இதைப் பார்க்கவில்லையே என்ற அந்த கவலைதான் என்னை இப்போது ஆட்கொண்டிருக்கிறது. அவர் பார்த்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார். ஆனால் அவர் இல்லை என்று சொன்னாலும் அவருடைய அன்பு மகனாக இருக்கக்கூடிய நான் அதைப் பார்த்து அவர் சார்பில், மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன்.

நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை, ஊடகங்களும் – ஊடகவியலாளர்களும் முக்கியமாக கலைஞரை கொண்டாடியாக வேண்டும்.

### கலைஞரை ஊடகத் துறையினர் போற்றுவது பொருத்தமானது!

பத்திரிக்கையாளர் - எழுத்தாளர் - அரசியல் ஆளுமை - திரையுலக கதை வசனகர்த்தா - நாடக நடிகர் - சின்னத்திரை வசனகர்த்தா என்று பன்முக ஆற்றலைக் கொண்டவர் கலைஞர் என்பதால், அவரை ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அனைவருமே போற்றுவது பொருத்தமான ஒன்று.

அப்படிப்பட்ட கடமையைதான், ஆனந்த விகடன் மறக்காமல் - மறுக்காமல் இன்றைக்கு அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், இந்த நிகழ்ச்சியை சிறப்போடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நிர்வாக இயக்குநர் சீனிவாசன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை உங்கள் அனைவரின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், விகடன் குழுமத்தின் சார்பில் ”கலைஞர் 100 விகடனும் கலைஞரும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு “கலைஞர் 100 விகடனும் கலைஞரும் என்ற நூலினை வெளியிட, அதன் முதல் பிரதியை மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் பா. சீனிவாசன், தி இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், தினமலர் இணை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, ஆனந்த விகடன் ஆசிரியர் தி. முருகன், பத்திரிகை மற்றும் ஊடகத்துறையினர் கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களை பற்றி ‘தி இந்து’ குழுமத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட ‘மாபெரும் தமிழ்க் கனவு’. அதேபோல், தலைவர் கலைஞர் அவர்களை பற்றி தயாரிக்கப்பட்ட ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ போல, விகடன் சார்பில்

‘கலைஞர் 100’ புத்தகத்தை இந்த மேடையில், நாம் பார்க்கிறோம், இனி அனைத்து மேடைகளிலும் இதைப் பார்க்கத்தான் போகிறோம்.

இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் - தோழர்கள் - பொறுப்பாளர்கள் மட்டுமல்ல, பத்திரிகையாளர்கள் - பொதுமக்கள் எல்லோரும் வாங்கிப் படித்துப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் 100 - வெளியிடுகின்ற ஆனந்த விகடன், இன்னும் சில ஆண்டுகளில் ‘விகடன் 100’ விழாவை காண இருக்கிறது. அதற்கு முன்கூட்டியே இந்த விழாவின் மூலமாக என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிகழ்ச்சிக்கு நிச்சயமாக என்னை அழைப்பார்கள். நம்முடைய கலைஞானியையும் அழைப்பார்கள். ‘இந்து’ ராம் அவர்களையும் அழைப்பார்கள். இருந்தாலும் முன்கூட்டியே என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விகடன் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து திராவிட இயக்கத் தலைவர்களோடு ஆனந்த விகடன் நெருக்கமான நட்பைப் பெற்றிருந்தது. நம்முடைய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் ‘குடிஅரசு’ ஏட்டை நடத்தியபோது, அதற்கு அதிகப்படியான விளம்பரங்களை பெற்றுத் தந்தவர், யார் என்று கேட்டால், ஆனந்த விகடனின் பிதாமகரான எஸ்.எஸ். வாசன் அவர்கள்தான்.

### ‘வருக அண்ணாதுரை’ என்று தலையங்கம் தீட்டிய விகடன்!

அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்களும் எஸ்.எஸ்.வாசன் அவர்களும் மிகமிக நெருக்கமாக இருந்தவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்முறையாக முதலமைச்சராக 1967-ஆம் ஆண்டு வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு உள்ளே வருகின்ற நேரத்தில் ‘வருக அண்ணாதுரை’ என்று விகடன் தலையங்கம் தீட்டியது.

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதல் மாநாட்டின்போது தனியாக 8 பக்கம் சிறப்புப் பகுதியை வெளியிட்டதும் ஆனந்த விகடன்தான். இங்கே குறிப்பிட்டு நினைவுபடுத்தினார்கள், இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு. பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை சென்னையில் நடத்தியபோது, அலங்கார ஊர்திகள் தயாரிக்கின்ற பொறுப்பை எஸ்.எஸ்.வாசன் அவர்களிடம்தான் முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் ஒப்படைத்து இருந்தார்கள்.

அன்றைக்குப் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்களும், எஸ்.எஸ்.வாசன் அவர்களும் இணைந்து நடத்திய ஊர்வலம் மிகப்பெரிய பாராட்டுகளை பெற்றது.

### கலைஞரை பாராட்டிய எஸ்.எஸ்.வாசன்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தநேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதாஞ்சலி, இன்றைக்கும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். யாரும் அதை மறக்க முடியாது... அதில் கடைசியாக சொல்வார்.

‘இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா’ என்று அந்தக் கவிதை எல்லாரையும் கலங்க வைக்கும்.

இந்தக் கவிதையை கேட்டு அதிகம் கலங்கினார் எஸ்.எஸ்.வாசன் அவர்கள். ‘உலகிலேயே இதயத்தை இரவலாகக் கேட்ட தலைசிறந்த கவிஞர் நீங்கள்தான்’ என்று வாசன் அவர்கள் கலைஞரை பாராட்டினார். இதை கலைஞர் அவர்களே பல மேடைகளில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதே நட்பானது எஸ்.எஸ்.வாசன் அவர்களின் புதல்வர் மரியாதைக்குரிய எஸ்.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தொடர்பு இருந்தது. 1980-ஆம் ஆண்டு ‘ஆனந்த விகடன் பொன்விழா’ நடந்தது. அப்போது அ.தி.மு.க. ஆட்சி, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர். ஆனாலும், அந்த விகடன் பொன்விழாவிற்கு, பல நிகழ்ச்சி கள், அதில் கவியரங்க நிகழ்ச்சிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத்தான் இந்த விகடன் அழைத்தது.

கலைஞர் பேசினார், அதைக் கவிதையாகவே சொன்னார். “கொள்கையிலே வேறுபாடு இருந்தாலும் - அதைச் சொல்கையிலே பண்பாடு தேவை என்று செய்கையிலே காட்டியவன் விகடன் தானே!” என்று தலைவர் கலைஞர் அவர்கள் கவிதையால் பாராட்டினார்.

“எத்தனையோ அரசியல் மாறுபாடுகள் - கருத்து வேறுபாடுகள் இவற்றிற்கு இடையே எல்லாவற்றையும் கடந்து அன்பும், நட்பும், தூய்மையான பாசமும் இருவரிடையே நிலவிட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு தோழமை வேண்டும் என்றால், அது நானும், பாலுவும் கொண்டுள்ள தோழமைதான்’- என்று தலைவர் கலைஞர் அவர்களே எழுதி இருக்கிறார். அந்தளவிற்கு இருவரும் நட்பாக இருந்தவர்கள்.

### சோலை என்னைப் பற்றி எழுதிய புத்தகம்!

மூத்த பத்திரிக்கையாளர், என்னுடைய அன்பிற்குரிய சோலை அவர்கள் என்ன பற்றி ஒரு புத்தகம் எழுதினார். 2010-ஆம் ஆண்டு விகடன் பிரசுரம்தான் வெளியிட்டது. ‘ஸ்டாலின் – மூத்த பத்திரிக்கையாளர் பார்வையில்’ என்ற தலைப்பில் அந்த புத்தக வெளியீட்டு விழா, சென்னை காமராசர் அரங்கில் மிகப் பிரமாண்டமாக நடத்தப்பட்டது.

இன்று கலைஞர் 100 நூலை விகடன் தயாரித்து வெளியிடுகிறது. எனவே, இந்த நட்பு என்பது காலம் காலமாக தொடரக்கூடிய ஒரு குடும்ப நட்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

இந்தப் புத்தகம் தலைவர் கலைஞர் பற்றிய கருவூலமாக அமைந்திருக்கிறது. இதைப் படிக்கும்போது தலைவர் கலைஞருடைய வாழ்க்கையோடு நாம் பயணிப்பதை போலவே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய டைரியைப் போல இருக்கிறது என்றே சொல்லலாம். முக்கியமான காலக்கட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய பேட்டிகள், நிருபர் களுக்கு தந்திருக்கக்கூடிய பதில்கள், விகடன் எழுதிய கட்டுரைகள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கிறது.

> *இந்தப் புத்தகம் தலைவர் கலைஞர் பற்றிய கருவூலமாக அமைந்திருக்கிறது. இதைப் படிக்கும்போது தலைவர் கலைஞருடைய வாழ்க்கையோடு நாம் பயணிப்பதை போலவே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய டைரியைப் போல இருக்கிறது என்றே சொல்லலாம். முக்கியமான காலக்கட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய பேட்டிகள், நிருபர்களுக்கு தந்திருக்கக்கூடிய பதில்கள், விகடன் எழுதிய கட்டுரைகள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கிறது.*

தன்னுடைய கலைப் பயணம் பற்றி 60 வாரங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதியிருக்கிற துணுக்குகளை படித்தாலே ஐம்பது ஆண்டு கால சினிமா உலகத்தை நாம் தெரிந்து கொள்ளலாம்.

1969-ஆம் ஆண்டு அண்ணா மறைவிற்கு பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற நேரத்தில், “கழகத்தின் முன்னேற்றத்திற்குப் பெருமளவு காரணமாக இருந்த கருணாநிதியின் ஆர்வமும் ஆற்றலும் அவரது நிர்வாகத்திலும் பிரதிபலித்து, தமிழகம் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று விகடன் உளமார விரும்புகிறான்” - என்று 23.2.1969 தேதியிட்ட விகடன் தலையங்கம் எழுதி இருந்தது.

### கலைஞரே வருக! கருத்தான ஆட்சி தருக!

1989-ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்தப்போது, ‘கலைஞரே வருக! கருத்தான ஆட்சி தருக’- என்று தலையங்கம் தீட்டியதும் ஆனந்த விகடன்தான். அப்படிப்பட்ட ஆட்சியை தான் கலைஞர் அவர்கள் தந்தார்கள்.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும், கலைஞர் அவர்கள் எடுத்த நிலைப்பாடுகளை இந்த நூலில் நாம் தெரிந்து கொள்ளமுடியும். கலைஞருடைய உழைப்பு, அறிவு, ஆற்றல் பற்றி தெரிந்து கொள்வதற்கு கருவூலமாக இந்த நூல் அமைந்திருக்கிறது. இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் கலைஞரை பற்றிய 108 பதிவுகள் இதில் இடம் பெற்றிருக்கிறது. இதற்கு மேல், மீதியை புத்தகத்தை வாங்கி நீங்களே படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

பத்திரிக்கை அதிபர்கள் எல்லாம் பெருமளவு இங்கே குழுமியிருக்கிறீர்கள். எனவே அவர்கள் குழுமியிருக்கக்கூடிய இந்த மேடையில், ஒரு ஆட்சி செயல்படுத்தி வருகிற நல்ல திட்டங்களை மனப்பூர்வமாக ஆதரித்து எழுதுங்கள். அப்படி எழுதினால்தான், நீங்கள் விமர்சிக்கும்போதும், அதற்கு உண்மையான மதிப்பும் மரியாதையும் இருக்கும்.

### நான்காவது தூணாக இருப்பது பத்திரிகைகள் தான்!

எதையும் ஆதரித்து எழுதாமல் - விமர்சித்து மட்டுமே எழுதினால், அந்த விமர்சனங்களுக்கு மதிப்பே இருக்காது. சரியானதை ஆதரிப்பதும், விமர்சனம் இருந்தால் அதை சுட்டிக் காட்டுவதும்தான் நடுநிலையான பத்திரிகைக்கு இருக்கக்கூடிய தர்மம்! அதன்படி தமிழ்நாட்டு ஊடகங்கள் செயல்பட வேண்டும் என்று மிகுந்த பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்காக இல்லை, நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக, இந்த சமுதாயத்திற்காக, இந்த இனத்திற்காக. ஏன் என்றால், இன்று ஜனநாயகம், மதச்சார்பின்மை, சகோதரத்துவம், சமூகநீதி ஆகியவை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. இதை அரசியல்ரீதியாக நாங்கள் எதிர்கொண்டு தடுப்போம். ஆனால், அது மட்டும் போதாது.

ஜனநாயகத்தினுடைய நான்காவது தூணாக இருப்பது, போற்றப்படுவது, பத்திரிகைகள்தான். எனவே, தங்களுடைய கடமையை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் விகடன் நெருக்கடிக்கு ஆளானது!

இந்து, ஆனந்த விகடன் போன்ற இதழ்கள் இந்தியாவின் விடுதலைப் போராட்டக் காலத்தில் வீறுகொண்ட போராட்டங்களை ஆதரித்த இதழ்கள். 1930-ஆம் ஆண்டும் - 1942-ஆம் ஆண்டும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஆனந்த விகடன் நெருக்கடிக்கு உள்ளானது. ‘அடக்குமுறை நீண்ட நாள் தலைவிரித்தாட முடியாது’- என்று அப்போது ஆனந்தவிகடன் தலையங்கம் தீட்டியது.

‘இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுங்கள் என்று சொல்வது ஆட்சேபகரமானது என்றால் விகடனும் குற்றவாளிதான்’- என்று அப்போது துணிச்சலாக விகடன் தலையங்கம் எழுதியது!

அதே ஆனந்த விகடனில், கடந்த மாதம் 16.8.2023 இதழில் தீட்டப்பட்ட தலையங்கம் மிகமிக முக்கியமானது. ஒன்றிய அரசால் நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பத்திரிகை மற்றும் காலமுறை இதழ்கள் பதிவு மசோதாவை கண்டித்து அந்த தலையங்கம் இருந்தது.

### ஒன்றிய அரசின் மசோதாவைக் கண்டித்து விகடன் தலையங்கம்!

- கொடுமையான விதிகளுடன் ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கும் புதிய மசோதா, பத்திரிகைச் சுதந்திரத்தை மிக மோசமாக நசுக்கும், அபாயகரமான விதிகளைக் கொண்டுள்ளது என்றும் -
- இவர்கள் செய்துள்ள திருத்தத்தின் மூலமாக செய்தித்தாள் பதிவாளர் - ஒரு செய்தித்தாள் நிறுவனத்துக்குள் நுழைந்து சோதனையிட முடியும் என்றும் -
- நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தனிநபர் தகவல் பாதுகாப்பு மசோதாவிலும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் பல அம்சங்கள் உள்ளன என்றும் -
- ஜனநாயகத்தின் நான்காம் தூணான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயலை ஒன்றிய அரசு தொடர்ச்சியாகச் செய்து வருகிறது என்றும், ஆனந்த விகடன் கண்டித்து தலையங்கம் தீட்டி இருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதம், ஒன்றிய அரசு அமல்படுத்திய தகவல் தொழில்நுட்பத் திருத்த விதிகள் 2023-ம், இதேபோன்ற மோசமான அம்சங்களை கொண்டிருந்தது என்று விகடன் தலையங்கம் கண்டித்திருக்கிறது. விமர்சனம் செய்பவர்களின் குரல்வளையை நெரிப்பது ஜனநாயகத்திற்கு அழகல்ல என்றும் சொல்லி இருக்கிறது விகடன்.

நான் சொல்லவில்லை. விகடன் தலையங்கம் சொல்லி இருப்பதைதான் இங்கே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதைத்தான் நான் வாசித்தேன். இதைத்தான் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி என்று சொல்கிறேன். நான் அரசியல் பற்றிப் பேசவில்லை, ஜனநாயகத்தை பற்றி தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

### எடிட்டர்ஸ் கில்டு அமைப்புக்கே இந்த நிலை!

மணிப்பூர் மாநிலம் நான்கு மாதங்களாக எரிந்து கொண்டு இருக்கிறது. அதை பற்றி நான் விவரிக்க விரும்பவில்லை. அது எல்லாருக்கும் தெரியும். மணிப்பூரில் என்ன நடக்கிறது என்று மூன்று வாரங்களாக விகடன் இதழிலேயே தொடர் கட்டுரை வெளியாகி இருக்கிறது. அங்கு உண்மையில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எடிட்டர்ஸ் கில்டு ஆப் இந்தியா அமைப்பைச் சேர்ந்தவர்கள் சென்றார்கள். சென்று விட்டு அந்த அறிக்கையையும் கொடுத்தார்கள்.

அப்படி அறிக்கை கொடுத்தவர்கள் மீதே மணிப்பூர் அரசு வழக்கு போட்டிருக்கிறது. எடிட்டர்ஸ் கில்டு அமைப்புக்கே இந்த நிலைமை என்றால், யோசித்துப் பார்க்கவேண்டும். ஏன் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி கடுமையாக இதை கண்டித்திருக்கிறார்.

உச்சநீதிமன்றமாக இருந்தாலும், தேர்தல் ஆணையமாக இருந்தாலும், அரசியல் சட்ட அமைப்புகள் அனைத்தும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்ற இந்த நேரத்தில், ஜனநாயகம் காக்க - அதன் மூலமாக இந்தியாவை காக்க வேண்டிய கடமை என்பது நான்காவது தூணாக இருக்கின்ற பத்திரிகைகளிடம் தான் இருக்கிறது.

ஜனநாயகம் காக்கப்பட்டால் தான் பத்திரிக்கைத் துறை என்பதே எதிர்காலத்தில் இருக்கும் என்பது என்னுடைய அக்கறையுள்ள வேண்டுகோளாக நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். அதை இந்த மேடையில் வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதித்தான் எடுத்துச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை!

காலத்தால் அழிக்கமுடியாத ஒரு கருவூலத்தை கலைஞருக்காக உருவாக்கித் தந்திருக்கக்கூடிய இந்த நூலை அர்ப்பணித்திருக்கக்கூடிய ஆனந்த விகடன் நிர்வாக இயக்குநர் சீனிவாசன் அவர்களுக்கும் - விகடன் பிரசுரம் ஆசிரியர் குழுவுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சாலைப் பணிகள் குறித்து நேரடி ஆய்வு நடத்த முதல்வர் முடிவு! ...

முதல் பக்கத் தொடர்ச்சி

பெருங்குடி மண்டலம், ராம் நகர் பகுதியில் சுமார் 175 எண்ணிக்கையிலான சாலைகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிக்காக சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் அனைத்து குழாய் பதிக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. ராம் நகர் 7வது குறுக்கு தெருவில் மாநில நிதி ஆணைய நிதியின் கீழ், சுமார் 700 மீட்டர் நீளம் மற்றும் 6 மீட்டர் அகலத்திற்கு 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளையும்;

ராம் நகர் 3வது பிரதான சாலை மேற்கு பகுதியில், சிமெண்ட் கான்கிரீட் கலவை கொண்டு சாலை வெட்டு சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு சுமார் 310 மீட்டர் நீளம் மற்றும் 1 மீட்டர் அகலத்திற்கு வைப்பு நிதியின் கீழ், 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளையும்;

ராம் நகர் 3வது பிரதான சாலை கிழக்கு பகுதியில், சுமார் 350 மீட்டர் நீளம் மற்றும் 5 மீட்டர் அகலத்திற்கு மாநில நிதி ஆணைய நிதியின் கீழ், 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தார் சாலை அமைக்கும் பணிகளையும் முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இச்சாலைப் பணிகளால் இப்பகுதியை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுவார்கள்.

**நெடுஞ்சாலைத் துறை சார்பில் மணப்பாக்கம் - கொளப்பாக்கம் கிருகம்பாக்கம் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்தல்**

கோடம்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் சாலை முதல் கொளப்பாக்கம் வழியாக மணப்பாக்கம் செல்லும் 5.6 கி.மீ நீளமுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இந்தச் சாலையில், சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 2.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் அமைக்கும் பணியும், இதே சாலையில் 330 மீட்டர் நீளத்திற்கு பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதாரத்துறை மூலமாக வடிகால் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இச்சாலை முழுவதும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருந்தது. குழாய்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டவுடன் நெடுஞ்சாலைத்துறையால் இச்சாலை போர்க்கால அடிப்படையில் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு, தற்போது சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணிகள் அனைத்தும் முடிவடையும் தருவாயில் உள்ளது.

இச்சாலை பணியால் கிரு கம்பாக்கம், கொளப்பாக்கம், குன்றத்தூர், முகலிவாக்கம் மற்றும் இதனை சுற்றியுள்ள பகுதிவாழ் மக்கள் சுமார் 1 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

**நெடுஞ்சாலைத் துறை சார்பில் ராமாபுரம் - திருவள்ளுவர் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்தல்**

திருவள்ளூர் நெடுஞ்சாலை கோட்டம், அம்பத்தூர் உட்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலை பிரிவைச் சார்ந்த மாவட்ட முக்கிய சாலையான வளசரவாக்கம் - இராமாபுரம் (வழி) வள்ளுவர் நகர் சாலையின் நீளம் 3 கி.மீ ஆகும்.

இச்சாலையானது கோடம்பாக்கம் - ஸ்ரீபெரும்புதூரில் (கி.மீ.0/2) தொடங்கி மவுண்ட் - பூந்தமல்லி - ஆவடி சாலையில் (கி.மீ. 3/2) முடிவடைகிறது. மேற்படி சாலையில் திட்டமிடப்பட்ட 2.6 கி.மீ நீளம் வடிகால்வாய் கட்டும் பணியில் 1.95 கி.மீ நீளம் வடிகால்வாய் பணி முடிக்கப்பட்டு மழைநீரானது தங்கு தடையின்றி நந்தம்பாக்கம் கால்வாயில் சென்றடைகிறது. மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் 2.20 கி.மீ நீளத்திற்கு நடைபெற்ற பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணி முடிவுற்று தற்போது தார் சாலை அமைக்கும் பணியானது மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் (Restoration) 2 கோடியே 23 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட சாலைப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இச்சாலைப் பணியால் கலைஞர் கருணாநிதி நகர், அசோக் நகர், ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம், நெற்குன்றம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதி வாழ் மக்கள் சுமார் 5 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் வளசரவாக்கம் முதல் வடபழனி சிக்னல் வரை நடைபெற்று வரும் சாலைப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் அமைந்துள்ள சாலைப் பணிகளை சீர்செய்திடவும், காலதாமதமில்லாமல் விரைந்து முடித்திட வேண்டும் என்று மெட்ரோ இரயில் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**அதிகாரிகளுக்கு முதல்வர் வழங்கிய அறிவுரை!**

சாலைப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், அனைத்து பணிகளையும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக தாமதப்படுத்தாமல் முடிக்கப்பட வேண்டும் என்றும், நகராட்சி நிர்வாகத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள், போக்குவரத்து காவல்துறை, மின்வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம், தொலைதொடர்புத் துறை மற்றும் சென்னை மெட்ரோ இரயில் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி, சாலைப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சாலைப் பணிகளை பார்வையிட்ட பின்னர், முதலமைச்சர் அவர்கள் முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர், சென்னை மெட்ரோ இரயில் மேலாண்மை இயக்குநர் மு.அ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் திட்ட இயக்குநர் அர்ஜுனன், முதன்மை பொது மேலாளர் அசோக் குமார் ஆகியோருடன் சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களில் சாலை சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், க. கணபதி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மை செயலாளர் த.உதயச்சந்திரன் தாயார் திருமதி. லீலாவதி அவர்கள் மறைவு செய்தி அறிந்த கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மறைந்த லீலாவதி உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன்,பி.மூர்த்தி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் கழக முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர்.

# தமிழ்நாடு நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன் தாயார் மறைவு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – அமைச்சர்கள் – எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் அஞ்சலி செலுத்தினர்!

நாமக்கல், செப். 22 -

தமிழ்நாடு நிதித்துறை செயலர் உதயச்சந்திரனின் தாயார் லீலாவதி நாமக்கல்லில் மறைவெய்தினார்.

நாமக்கல், நகராட்சிக்குட்பட்ட சேலம் ரோட்டில் உள்ள என்.ஜி.ஜி.ஓ. காலனியைச் சேர்ந்தவர் உதயச்சந்திரன். ஐ.ஏ.எஸ். அதிகாரியான இவர், பல்வேறு மாவட்டங்களில் பணிபுரிந்துள்ளார். தற்போது, சென்னையில், தமிழக அரசின் நிதித்துறை செயலாளராகவும், சிறப்பு திட்டங்கள் அமலாக்கத் துறை செயலாளராகவும் பதவி வகித்து வருகிறார்.

இந்த நிலையில், நாமக்கல்லில் உள்ள அவரது வீட்டில் வசித்து வந்த, அவரது தாயார் லீலாவதி (72), கடந்த சில நாள்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். சேலம் தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட லீலாவதி நேற்று முன்தினம் 20 ம் தேதி சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார்.

சென்னையில், இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியுடன் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற உதயச்சந்திரன், அவரது தாயார் லீலாவதி மறைவு செய்தி அறிந்து நாமக்கல்லுக்குப் புறப்பட்டு வந்துள்ளார்.

நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர் உதயசந்திரனின் தாயார் லீலாவதி தங்கராஜ் உடல் நல குறைவால் சேலம் மாவட்டம் காவேரி மருத்துவமனையில் உயிரிழந்தார்.

நாமக்கல் சேலம் சாலை, முருகன் கோயில் பின்புறம், NGGOS காலனியில் உள்ள அன்னாரது இல்லத்தில் அவர்களது உடலுக்கு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வணிக வரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, வீட்டு வசதித் துறை அமைச்சர் செ.முத்துசாமி, வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில்,

சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா சேலம் மாவட்ட ஆட்சியர் கார்மேகம், கரூர் மாவட்ட ஆட்சியர் சிவ சங்கர், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் நகரக் கழகச் செயலாளர் ராணா ஆனந்த், பூபதி, சிவக்குமார், நாமக்கல் நகர மன்றத் தலைவர் து.கலாநிதி மற்றும் ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

# தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவியை நீக்கக் கோரிய கையெழுத்துப் படிவங்கள்!

## குடியரசுத் தலைவர் மாளிகையில் ஒப்படைத்தார் வைகோ!

சென்னை, செப். 22 -

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.இரவி அவர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமாகவும், தமிழ்நாடு அரசுக்கு விரோதமாகவும் செயல்பட்டு வருவதால், அவரை தமிழ்நாட்டின் ஆளுநர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று மறுமலர்ச்சி தி.மு.க. சார்பில், 57 எம்.பி.க்கள் உள்ளிட்ட 50 இலட்சம் பேரிடம் கையெழுத்துக்கள் பெறப்பட்டது.

அவற்றை அட்டைப் பெட்டிகளில் வைத்து, இரயிலில் கொண்டுவந்து, நேற்று முன்தினம் 20.09.2023 பகல் 12 மணி அளவில் நானும், கணேசமூர்த்தி எம்.பி., அவர்களும் குடியரசுத் மாளிகை அலுவலகத்தில் ஒப்படைத்தோம்.

எங்கள் கோரிக்கை மனு குடியரசுத் தலைவர் பார்வைக்கு அனுப்பப்படும் என்றும், அவர் தருகின்ற பதிலை உங்களுக்கு நாங்கள் தெரிவிக்கிறோம் என்றும் உறுதி கூறினார்கள்.

கையெழுத்திட்ட அரசியல் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு தரப்பில் உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் இந்த செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு மாத காலம் இதற்காகப் பாடுபட்ட மறுமலர்ச்சி தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளில் உள்ள நிர்வாகிகளுக் கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### கடலூர் மேற்கு மாவட்டம் - பண்ருட்டி வடக்கு

# ஒன்றியச் செயலாளர் கா.இராதாகிருஷ்ணன் மறைவு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் - சபா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ., அஞ்சலி!

கடலூர், செப். 22 -

கடலூர் மேற்கு மாவட்டம் பண்ருட்டி வடக்கு ஒன்றியம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சிறுவத்தூர் ஊராட்சியை சேர்ந்த பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் கா. இராதாகிருஷ்ணன் வயது 67 நேற்று 21.09.2023 உடல்நல குறைவினால் மறைவு எய்தினார் என்பதை அறிவிக்க வந்திருக்கிறோம்.



இவர் நெய்வேலி சட்டமன்ற தொகுதி பண்ருட்டி வடக்கு வடக்கு ஒன்றியம் சிறுவத்தூரில் பருவத்திலே கழகத்தின் பால் மிகவும் பற்று கொண்டவர் இவர் சிறுவத்தூர் கிளைக் கழக செயலாளராகவும் ஊராட்சி தலைவர் செயலாளராகவும் தொடர்ந்து கழக பணியாற்றி வந்தார் இவரது தந்தை காசிநாதன் அவர்களைப் போன்று இவரும் கழகம் தான் முதலில் பிறகுதான் குடும்பம் என தனது வாழ்நாள் முழுவதும் கழகத்திற்காக தன்னையே அர்ப்பணித்தவர்.

பண்ருட்டி வடக்கு ஒன்றியத்தில் கழக வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர்.

இவர் 2015 ஆம் ஆண்டு முதல் பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளராக மிகவும் திறம்பட கழக பணியாற்றி வருகிறார்.

கடந்த சில நாட்களாக உடல் நலக் குறைவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவரை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் மற்றும் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. ராஜேந்திரன் ஆகியோர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று 21.09.2013 காலை மறைவெய் தினார் என்ற தகவல் அறிந்ததும் மாவட்ட செயலாளர் சி. வெ.கணேசன் மற்றும் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அண்ணாருக்கு சந்தோஷ் என்கிற மகனும் சங்கீதா எழிலரசி என்கின்ற இரு மகள்களும் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (22.09.2023) காலை 10 மணி அளவில் சிறுவத்தூர் ஊராட்சியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# மண்டைக்காடு பேரூர் வாக்குச்சாவடி பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் சிறப்புரை!

நாகர்கோவில், செப். 22-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மண்டைக்காடு பேரூர் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், கல்லுக்கூட்டம் பேரூரில் உள்ள 12 வாக்குச்சாவடிகளில் 100 வாக்காளர்களுக்கு 1 முகவர் என்று நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் 20.09.2023, புதன் கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு மண்டைக்காடு சக்தி சதன் திருமண மண்டபத்தில் பேரூர் கழக செயலாளர் வி. ராபர்ட் கிளாரன்ஸ் தலைமையில், குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏ. சுரேந்திர குமார் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத் தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக நிர்வாகி களுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றி னார்.

மேலும் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களின் (BLC) வருகை பதிவேடு தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டது. கூட்டத்தில் தலைமைக் கழக வழக்கறிஞர் ஏ.என். லிவிங்ஸ்டன், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2), வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (BLC) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: 1

ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சதிகாரமான தவறான ஆட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தங்கள் துயரங்களிலிருந்து விடுபட நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டு கின்ற வேட்பாளரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய இன்றே அயராது பாடுபட வேண்டும் எனவும் மேலும் களபணியை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மண்டைக்காடு பேரூர் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார். இதில் பேரூர் கழக செயலாளர் வி.இராபர்ட் கிளாரன்ஸ், ஏ.சுரேந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர்

# த.உதயச்சந்திரன் தாயார் லீலாவதி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,செப். 22 -

தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் தாயார் மறைவு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்களின் அன்னையார் திருமதி. லீலாவதி அவர்கள், உடல் நலக் குறைவால் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரது மறைவால் வாடும் உதயச்சந்திரன், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அருண் தவசு பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.மாவட்ட அமைப்பாளர் ராஜா சங்கலிங்கம் வரவேற்புரையாற்றினார்.நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார்ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர் மாஞ்சோலை மைக்கேல் மற்றும் துணைத் தலைவர்,துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.9.2023) நெடுஞ்சாலைத் துறை சார்பில் மணப்பாக்கம் – கொளப்பாக்கம் – கெருகம்பாக்கம் சாலையில் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.9.2023) நெடுஞ்சாலைத் துறை சார்பில் ராமாபுரம் – திருவள்ளுவர் சாலையில் 2 கோடியே 23 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற சாலைப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, துணை மேயர் மு.கேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தென்னிந்தியாவின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க அரசியல் சூழ்ச்சி!

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை திடீரெனக் கொண்டு வருவது ஏன்?

## மக்களவையில் கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, செப். 22 - “மகளிர்” இட ஒதுக்கீடு மசோதாவை ரகசியமாகக் கொண்டு வருவது ஏன்?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பினார்.**

பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா நாடாளுமன்றத்தில்19.9.2023ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம்(20.9.2023) அதன் மீதான விவாதம் நடந்தது. இந்த விவாதத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும் மக்களவை தி.மு.க. துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பேசினார்.

இதுகுறித்து அவரது உரை வருமாறு:-

“நான் மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவில் உரையாற்றுவதற்காக மகிழ்கிறேன். இதுபோன்ற வெகு சில மசோதாக்கள்தான் நாம் அனைவரும் ஏற்கும் வகையில் உள்ளது. ஏனென்றால், அனைவருடைய ஒத்துழைப்போடும் இந்த மசோதா நிறைவேற்றப்பட உள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக பாரதிய ஜனதா இந்த சட்ட மசோதாவையும் தனது குறுகிய அரசியலுக்கு பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது.

இந்த விவாதத்தில் நான் பேசத் தொடங்கும்போதே எதிர்ப்புக் குரல் எழுப்புகிற பி.ஜே.பி.யினருக்கு தந்தை பெரியார் சொன்னதை நினைவுபடுத்துகிறேன். ‘பெண்களை மதிக்கிறோம், அவர்களின் சுதந்திரத்திற்காக பாடுபடுகிறோம் என்ற ஆண்களின் பேச்சுகள் பெண்களை ஏமாற்றும் சூழ்ச்சி மட்டுமே’ என பெரியார் கூறியதை நினைவுபடுத்துகிறேன். மேலும் சிலியின் முன்னாள் அதிபர் மெஷல் பாஷிலே, ‘சிறப்பான ஜனநாயகம் என்பது பெண்கள் வாக்களிப்பது மட்டுமல்ல... பெண்கள் தேர்வு செய்வது மட்டுமல்ல... பெண்களை தேர்வு செய்யப்படுவதும் ஆகும்’ என்கிறார்.

1910களில் Montagu-Chelmsford Reforms சீர்திருத்தத்துக்குப் பிறகு அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலும், பாம்பே மாகாணத்திலும் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை பெற்றார்கள். நீதிக் கட்சி 1921 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதி பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கும் தீர்மானத்தை இந்தியாவிலேயே முதல் முறையாக நிறைவேற்றினார்கள்.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி!**

1927 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் முறையாக தனது முதல் சட்டமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுத்தது. அவர்தான் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. தேவதாசி என்னும் பெண்களுக்கு எதிரான கொடுமையை ஒழித்தவர் அவர்தான்.

இப்படிப்பட்ட பின்னணியில் 100 ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் மகளிர்க்கு 33% இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை இன்னமும் நிறைவேற்றவில்லை. 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார், பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா முதன்முறையாக 1996 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி ஆட்சியில் தி.மு.க.வின் ஆதரவோடு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. தேவகவுடா அவர்கள் பிரதமராக இருந்தபோது சட்ட அமைச்சர் ராம்நாத் கலாப் கொண்டுவந்தார். மீண்டும் எங்களது மரியாதைக்குரிய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இந்த மசோதாவை கொண்டு வந்தார்.

ஆனால் 2010 இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் இந்த மசோதா ராஜ்யசபாவிலே நிறைவேற்றப்பட்டது. அப்போது அந்த மசோதா குறித்த விவாதத்தின் மீதான உரையாற்றும் நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. 13 ஆண்டுகளுக்கு முன்பே இந்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசினேன். 13 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதும் விவாதித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

**கலைஞர் கடிதம்!**

இந்த பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா என்பது பா.ஜ.க.வின் தேர்தல் வாக்குறுதியாக இருந்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் பல தலைவர்கள் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். எங்களது தலைவர் கலைஞர் 2014 இல் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதினார்.



திருமதி. சோனியா காந்தி 2017 ஆம் ஆண்டு இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமருக்கு வேண்டுகோள் வைத்தார். எங்களது முதலமைச்சர் ஸ்டாலின் 2017 இல் இந்த மசோதாவை நிறைவேற்றுமாறு பிரதமருக்கு மீண்டும் வேண்டுகோள் வைத்தார். நம் நாட்டில் பெண்களுக்கான அதிகாரமளிக்கும் இந்த இட ஒதுக்கீடு மசோதாவை இன்னமும் நிறைவேற்ற முடியாமல் போராடிக் கொண்டிருப்பது கவலையளிப்பதாகவும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

பெண்களுக்கான இடஒதுக்கீட்டை வலியுறுத்தி தி.மு.க. டெல்லியில் பேரணி நடத்தியது. ஒருமித்த கருத்து கொண்ட பெண்ணிய அமைப்புகள் இந்த பேரணியில் கலந்துகொண்டனர். இந்த விவகாரம் தொடர்பாக இந்த அவையில் நான் பல முறை பேசியிருக்கிறேன். பல முறை இது தொடர்பாக கேள்வி எழுப்பியிருக்கிறேன். அப்போதெல்லாம் அரசு சார்பில் சொல்லப்பட்டதெல்லாம், ‘நாங்கள் இந்த மசோதா தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவருடன் பேசி ஒருமித்த கருத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்’ என்பதுதான்.

இப்போது என்ன ஒருமித்த கருத்து ஏற்பட்டது, மசோதாவைக் கொண்டு வரும் முன் என்ன விவாதங்கள் நடத்தப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். இந்த மசோதா ரகசியமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடர் எதற்காக கூட்டப்படுகிறது என்பதை முன்கூட்டியே சொல்லவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கூட இந்த மசோதா கொண்டு வரப் படுகிறது என்பதை அரசியல் தலைவர்களுக்கு தெரிவிக்கவில்லை. உரையாடல் நடத்தப்படவில்லை.

**சீருடை மாற்றம்!**

திடீரென எங்களது கணினித் திரைகளில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றப் பணியாளர்களின் சீருடை திடீரென தாமரைக்கு மாற்றப்பட்டதைப் போல இந்த மசோதாவும் திடீரென கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மகாகவி பாரதி பாடுகிறார், ‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்... எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி’ என்று. இந்தியாவின் கோடானு கோடி சகோதரிகள் இந்த மசோதாவுக்காக காத்திருந்தார்கள். இன்னும் இந்த மசோதா எப்போது சட்ட வடிவமாகி அமலுக்கு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

2010 இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்ட போது எந்த நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. நிறைவேற்றப்பட்ட உடனேயே கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் பின், அதையடுத்து தொகுதி மறுவரையறைக்குப் பின்னர்தான் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எங்களது தலைவரும் முதல்வருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘இந்தியா மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாமல் இருக்கிறது. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை இன்னும் நடத்தாத ஒரே நாடு இந்தியா. எப்போது நடைபெறும் என்ற உத்தரவாதத்தையும் இதுவரை பா.ஜ.க. அரசு தரவில்லை. எப்போது நடைபெறும் என்று தெரியாத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப்படையில் நடக்கவுள்ள தொகுதி மறுவரையறை அதன் பேரில் 2029 தேர்தலில் நடைமுறைக்கு வரும் மகளிர் ஒதுக்கீட்டுக்கு இப்போது சட்டம் இயற்றும் விசித்திரம் பா.ஜ.க.வால் அரங்கேற்றப்படுகிறது.

**அநீதியான முயற்சி!**

தமிழ்நாட்டின் மீது தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (DELIMITATION) உள்ளது. மக்கள்தொகை அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்’ என்று கூறியுள்ளார்.

‘நாங்கள் இந்த மசோதாவை ஆதரிக்கிறோம். ஆனால், இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பது ஏன் தொகுதி மறுசீரமைப்போடு தொடர்புபடுத்தப்படுகிறது? என்று கேள்வி எழுப்பியுள்ள எங்கள் தலைவர் ஸ்டாலின், ‘இது 2024 தேர்தலை வைத்து பா.ஜ.க. நடத்தும் நாடகம்’ என்று குறிப்பிட்டுள்ளார். மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி, தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மேலும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை புறந்தள்ளாமல், அதன் நியாயத்தை பரிசீலிக்குமாறு ஒன்றிய ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

பெண்கள் பிரதிநிதித்துவத்தில் உலகில் உள்ள 193 நாடுகளில் இந்தியா 141 ஆவது இடத்தில் இருக்கிறது. நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளை விட பின் தங்கியுள்ளது. இன்னும் எத்தனை காலம் காத்துக் கொண்டிருக்கப் போகிறோம், இந்த மசோதாவை நடைமுறைப்படுத்த? இந்த மசோதாவை வரும் நாடாளுமன்றத்திலேயே நடைமுறைப்படுத்த வேண்டும். இது பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பது அல்ல... ஆண்டாண்டு காலமாக இழைக்கப்பட்ட பாரபட்சத்தையும், அநீதியையும் களைவதாகும்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, தொகுதி மறுசீரமைப்பு என்றெல்லாம் நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருந்தால் இந்த மசோதா இப்போதைக்கு நடைமுறைக்கு வர முடியாது. காத்திருப்பு தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

ஓர் ஆண் பெண் தன்மையை கொண்டிருந்தால் அவரை கடவுள் என்று கொண்டாடுகிறீர்கள். ஆனால் ஒரு பெண், உறுதியாக இருந்தால் அவரை ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள். கடவுளை நம்புகிறீர்கள்... இந்துயிசத்தை நம்புகிறீர்கள். உங்கள் கடவுள் காளியை ஏற்கிறீர்கள் அல்லவா? உறுதியான கடினமான தன்மை கொண்ட காளியை ஏற்கும் நீங்கள்... ஏன் உறுதி கொண்ட பெண்களை ஏற்க மறுக்கிறீர்கள்?

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கேற்றதை நீங்கள் பார்த்ததில்லையா? உறுதி கொண்ட தலைவரான இந்திரா காந்தியை இந்த நாடு பார்க்கவில்லையா? ஜெயலலிதாவும் மிக உறுதியான தலைவர்தான். எனக்கு இதை சொல்வதில் எந்தத் தயக்கமும் இல்லை. மாயாவதி, சோனியா காந்தி, மம்தா பானர்ஜி... நீங்கள் (பாஜகவினர்) அடிக்கடி மறந்துவிடும் சுஷ்மா ஸ்வராஜ் அவர்கள் இப்படி நிறைய பெண் தலைவர்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

மறைந்த அருண் ஜேட்லி ஒரு முறை விவாதத்தில் பேசினார். ‘அடையாள அரசியல் என்பது கொள்கை அரசியலாக மாற வேண்டும்’ என்று குறிப்பிட்டார்.

இந்த மசோதாவின் பெயர் நாரி ஷக்தி வந்தன் பில். பெண்களுக்குக் கொடுக்கப்படும் சலுகை அல்ல. இது சலுகை என சொல்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். பெண்களை வணங்குகிறோம், பெண்களை வழிபடுகிறோம் என்பதெல்லாம் தேவையில்லை. இது பெண்களுக்கான உரிமை. ஆண்களுக்கு சமமாக பெண்கள் நடத்தப்படுவதையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது எங்கள் நாடு, இது எங்கள் நாடாளுமன்றம்”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

---

### இறையன்பன் குத்தூஸ் தலைமை! கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின்

## சென்னை மண்டலம் - புதுவை மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### ஆர்.எஸ். பாரதி சிறப்புரை! நே.சிற்றரசு - மயிலை த.வேலு முன்னிலை!

*சென்னை, செப். 22-*

*கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் சென்னை மண்டலம் (இடம் பெறும் மாவட்டங்கள் - சென்னை வடக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தெற்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு) மற்றும் புதுவை மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (21.9.2023 - வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை தேனாம்பேட்டை, அன்பகத்தில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்கு கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் இறையன்பன் குத்தூஸ் தலைமை வகித்தார்.*

*இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு - மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் நந்தனம் மதி, ஆ.ராஜா சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன் வரவேற்றார்.*

*இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் நன்றி கூறினார்.*

---

### நிலவில் விக்ரம் லேண்டரை மீண்டும்

## செயல்பாட்டுக்குக் கொண்டுவர தீவிரம்!

### இஸ்ரோ அறிவிப்பு!

*பெங்களூரு, செப். 22-*

*நிலவின் தென்பகுதியில் தரையிறங்கியுள்ள விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவரை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து இயக்க காத்திருப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.*

*நிலவின் தென்பகுதியில் ஆராய்ச்சி செய்ய இந்தியா அனுப்பிய சந்திரயான் 3 விண்கலம், நிலவின் சுற்றுவட்டப் பாதையில் சுற்றி வருகிறது. அதிலிருந்து விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் கீழிறக்கப்பட்டு நிலவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*சூரிய ஒளி இருந்தபோது ஆய்வு பணி மேற்கொண்ட விக்ரம் லேண்டரும், பிரக்யான் ரோவரும் சூரிய ஒளி மறைந்தபிறகு தூக்க நிலையில் உள்ளன. இந்நிலையில் நிலவின் தென்பகுதியில் நேற்று சூரிய ஒளி தென்படதொடங்கியுள்ளது. தூக்க நிலையில் உள்ள விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் மீது சூரிய ஒளிப்பட தொடங்கியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. தேவையான சூரிய சக்தி கிடைத்ததும் லேண்டர் மற்றும் ரோவர் கருவி செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படும், அதன் பிறகு இன்று அதனுடன் தொடர்பு புதுப்பிக்கப்படுமென்றும் இஸ்ரோ கூறியுள்ளது.*

*திட்டமிட்டது போல 2 கருவிகளும் செயல்பட்டால், நிலவின் தென்பகுதியில் மேலும் 14 நாள்கள் ஆய்வு செய்ய முடியும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.*




இராமநாதபுரம் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத் தொகை பெறுவதற்கான வங்கி அட்டைகளை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் பா.விஷ்ணு சந்திரன், மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., செ.முருகேசன் எம்.எல்.ஏ., இராம.கருமாணிக்கம் எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில்

# கை வைப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை!

## துறையின் ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேட்டி!

சென்னை, செப். 22 -

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் (20.09.2023) சென்னை, கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப் பதிவாளர்கள் ஆகியோர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி.ஜெ.விஜயராணி , சிறப்புபணி அலுவலர் (தமிழ்நாடு கூட்டுறவு வங்கி) .எம்.பி.சிவன்அருள். (ஓய்வு) ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைத்து கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாட்சியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக கூட்டுறவு வங்கிகளில் புதிதாக சேமிப்பு கணக்கு துவங்கப்பட்ட விவரம், கூட்டுறவுத் துறை அறிவிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள், புதிய உறுப்பினர் சேர்க்கை, பயிர்கடன்கள் வழங்கிய விவரம், பயிர்க் கடன் வழங்குதல் மற்றும் கால்நடை பராமரிப்பு கடன் வழங்குதலில் முன்னேற்றம், கூட்டுறவுச் சங்கங்களில் வைப்புத் தொகை, கடன்கள் வழங்குதலில் முன்னேற்ற விவரம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக உருவாக்குதல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தணிக்கை முன்னேற்றம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நிதிச்சமமின்மை / ஆதாரக் குறைவு, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி செயல்பாடுகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பாடுகள், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் செயல்பாடுகள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் செயல்பாடுகள், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை முன்னேற்றம், பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளில் சில்லறை விற்பனை முன்னேற்றம், கூட்டுறவு மருந்தகங்கள், நியாயவிலைக் கடைகள் ஆய்வு மற்றும் கண்டறியப்பட்ட முறைகேட்டுத் தொகை, நியாயவிலைக் கடைகளில் UPI வசதி ரொக்கமற்ற பணப் பரிவர்த்தனை குறித்தான முன்னேற்றம், நியாய விலை கடைகளுக்கு ISO 9001:2015 மற்றும் ISO 28000:2007 ஆகிய பன்னாட்டு தர நிர்ணய சான்று பெறுதல் குறித்தான முன்னேற்றம், காலிக்கோணிகள் விற்பனை மற்றும் நிலுவை விவரம், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு சொந்த கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் மற்றும் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்களின் கட்டுமான நிலை குறித்த முன்னேற்றம், நியாயவிலைக் கடைகளில் 2கி.கி / 5கி.கி எரிவாயு (FTL) உருளைகள் விற்பனை தொடங்கப்பட்ட விவரம், பனைவெல்லம் தேவைப்பட்டியல் அளித்தது, கொள்முதல் மற்றும் விற்பனை, சிறுதானியம் தேவைப் பட்டியல் அளித்தது, கொள்முதல் மற்றும் விற்பனை (சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் மட்டும்), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் கழகத்திடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை விவரம், வேளாண்விளைபொருட்கள் விற்பனை, கூட்டுறவு விற்பனை சங்கங்கள், பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள், கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் கிடங்குகளை பதிவு செய்தல் / eNWR issue / தானிய ஈட்டுக் கடன், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பணிகள் முன்னேற்றம், நீதிமன்ற வழக்குகளில் எதிர் வாதுரை (Counter Affidavit) தாக்கல் செய்யப்பட வேண்டிய இனங்கள் குறித்த விவரம், நீதிமன்ற தீர்ப்பில் கால நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட ஆணைகள் மீது நிலுவையில் உள்ள நடவடிக்கைகள் குறித்த விவரம், நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் நிலுவை விவரம், முதல்வரின் முகவரி போன்ற பொருண்மை குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெறும் பணிகளை தொய்வின்றி, விரைந்து முடிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்கள்.

பின்னர், மாநில அளவில் சிறப்பாக செயல்பட்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக அதிக அளவில் புதிதாக சேமிப்பு கணக்கு துவங்கியமைக்காக திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் உள்ளிட்ட குழுவினருக்கும் மற்றும் 01.04.2023 முதல் 31.08.2023 வரை அதிக கடன், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டது, அதிக சேமிப்பு கணக்கு துவங்கியது, அதிக சங்கங்களை லாபத்தில் செயல்பட வைத்தது, அரசின் அறிவிப்புகளை விரைவாக செயல்படுத்திய சட்டபூர்வ இனங்களில் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்தது உள்ளிட்ட அனைத்து வகையிலும் சிறப்பாக செயல்பட்டமைக்காக அரியலூர் மற்றும் ஈரோடு மண்டல இணைப் பதிவாளர்களை பாராட்டி பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்.

மேலும், சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் பெரியார் நகர் கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்த செ.சின்னசாமி (லேட்) அவர்களின் மகள் செல்வி.சி.சிவசெல்விக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையினை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது : -

மக்களுக்கு சேவை செய்கின்ற துறையாக, குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த ஒரு சாமானிய மக்களும் இந்த துறையின் மூலம் பயனடையாதோர் இல்லை அல்லது எந்த ஒரு சேவையையோ பெறாதவர்கள் இல்லை என்று சொல்ல கூடிய அளவிற்கு அனைத்து இல்லங்களுக்கும், அனைத்து மக்களுக்கும் சேவை செய்கின்ற துறையாக இந்த துறை விளங்குகிறது. அது குடிமைப்பொருட்கள் வழங்குவதாக இருந்தாலும் சரி அல்லது அரசின் சார்பில் முதலமைச்சர் அவ்வப்போது அறிவிக்கின்ற சிறப்பு திட்டங்களை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்ப்பதாக இருந்தாலும், அதேபோல வங்கிகளை இணைத்து ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கும், விவசாயிகளுக்கும், சிறு தொழில் செய்வோர்களுக்கும், கைம் பெண்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் என்று பாதிக்கப்பட்ட நலிந்த பிரிவினருக்கு பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கி, அவர்களுக்கு அதனை வழங்கி, அவர்களை பொருளாதார ரீதியிலாக உயர்த்துகின்ற பெரும்பங்கு இந்த துறைக்கு இருக்கின்றது.

அதேபோல, கூட்டுறவு சங்கங்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலமாக இயங்கின்ற துறையாகவும் இத்துறை இருக்கின்றது. புதிதாக இத்துறையின் மூலம் பயிற்சி தருகின்ற கல்வி நிலையங்களும் மாவட்ட வாரியாக இயங்கிவருகிறது. இப்படி பண்முகத் திறமை கொண்டது இந்த கூட்டுறவுத்துறை. சமீபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கலைஞர் பெயரிலான மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை செயல்படுத்துவதில் முதலமைச்சர் அவர்களின் பாராட்டுகளையும் இத்துறையின் கூட்டுறவு வங்கிகள் பெற்றிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் புதிதாக 9 லட்சத்து 91 ஆயிரம் புதிய வங்கி கணக்குகள் கூட்டுறவு வங்கிகளுக்கு கிடைத்துள்ளது மகிழ்ச்சியான செய்தி. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாகவும், அதை விட கூடுதலாகவும் நமது கூட்டுறவு வங்கிகளின் சேவைகளை மக்களுக்கு வழங்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது. கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்ப தும் இத்துறையின் பணியாகும்.

படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றும் வகையில், விற்பனையாளர்கள், கட்டுநர்கள் என 6,500 காலிப்பணியிடங்களுக்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, சுமார் 4,50,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 3,50,000 விண்ண ப்பதாரர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு, அதில் 24 மாவட்டங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களுக்கான தேர்வுப்பட்டியல் விரை வில் வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கூட்டுறவுத்துறையில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வில், இத்துறையின் செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளது. இருந்தாலும் இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும் என அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் நமது அலுவலர்களுக்கு நானும், செயலாலர் அவர்களும், பதிவாளர் அவர்களும் வழங்கி உள்ளோம். இன்றைய காலகட்டத்தில் வங்கி சேவை என்பது போட்டிகள் நிறைந்த உலகமாக உள்ளது. அதிலே நவீனமயமாக்கும் பணிகளையும் சிறப்பாக முன்னெடுத்து வந்துள்ளோம். இன்னும் மூன்று அல்லது நான்கு மாதகாலங்களுக்குள் எல்லா வங்கிகளுக்கு இணையாக சேவையினை வழங்கி, வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெறக் கூடிய வங்கிச்சேவையை இத்துறையின் மூலம் வழங்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

**செய்தியாளர்களுக்கு பேட்டி!**

கேள்வி : கடந்த காலங்களில் வெங்காயம், தக்காளி விலை உயர்வைப்பார்த்தோம். வரும் காலங்களும் மழைக்காலமாக இருப்பதால் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

பதில் : சந்தை நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வருகின்றோம். கூட்டுறவுத்துறை மட்டுமே சந்தையை கட்டுப்படுத்துவது என்பது கடினமான ஒன்று. உணவு துறை, வேளாண்துறை, கூட்டுறவுத்துறை சேர்ந்த உயர் மட்ட அலுவலர்கள் கலந்தாலோசித்து வருகிறார்கள்.

கேள்வி : தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் குறைந்த இருப்புத்தொகை (Minimum Balance) இல்லை என்ற காரணத்தினால் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் வழங்கப்பட்ட உரிமைத்தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

பதில்:இதுபோன்ற செய்திகள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு, நிதித்துறை அமைச்சர் மூலம் வங்கிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“இது உரிமைத்தொகை இதிலே கை வைப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை” என்ற கண்டிப்பான அறிக்கை இப்போது வெளிவந்திருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இதுபோன்று நடக்க வாய்ப்பில்லை.

கேள்வி: பயிர்கடன் தற்போது வரை எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது? நிர்ணயிக் கப்பட்ட இலக்கை விட அதிகமாக வழங்கப்பட்டுள்ளதா?

பதில் : கடந்த ஆட்சி காலத்தை விட, ஏன்? கடந்த ஆண்டை விட பயிர்கடன் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.12 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, ரூ.13,500 கோடியைத் தாண்டியது. இந்தாண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், எங்களுக்கு பயிர்கடனுக்காக ரூ.14 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயம் செய்துள்ளார்கள். கடந்த ஆண்டைப் போல இந்தாண்டும் நாங்கள் இலக்கையும் தாண்டி பயிர்கடன் வழங்கி அதனை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

கேள்வி : கூட்டுறவுத்துறையின் CoBazaar என்ற செயலி மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த செயலியினை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

பதில் : நிச்சயமாக. மக்கள் சேவையில் இத்துறை பல்வேறு யோசனைகளை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது. CoBazaar செயலியில் நவீன யுக்திகளைப் பயன்படுத்தும் எண்ணம் ஆய்வில் உள்ளது. விரைவில் அதற்கான அறிவிப்பு வெளியிடப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் பேட்டி அளித்தார்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 145 வது பிறந்த தினத்தை முன்னிட்டு திருமங்கலம் தொகுதி, தே.கல்லுப்பட்டி ஒன்றியம் முத்தப்பன்பட்டியில் உள்ள சேடப்பட்டியார் திடலில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அருண்தவசு பாண்டியன் தலைமை! ராஜா சங்கரலிங்கம் வரவேற்புரை!

# நெல்லை கிழக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் சிறப்புரை!

நெல்லை.செப்.22-

நெல்லை கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி ஆலோசனை கூட்டம் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் அருண்தவசு பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் ராஜா சங்கரலிங்கம் வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்டத் துணை செயலாளர் மாஞ்சோலை மைக்கேல், துணை தலைவர் சுடலைமுத்து துணை அமைப்பாளர்கள் வெங்கடேசன், சண்முகவேல், பூதப்பாண்டியன், குமரகுரு கருப்பசாமி, பாண்டியன், தன கிருபா, ஆறுமுகம், மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்ட நிறைவில் ஆச்சியூர் என். ராமசாமி நன்றி உரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுடைய இமாலய உழைப்பின் ஈராண்டில் ஆட்சி ஈராண்டே சாட்சி மாத காலத்தின் காரணமாக தமிழகத்தில் பலதரப்பட்ட மக்கள் தினமும் ஒரு நலத்திட்டங்களை பெற்று வருகிறார்கள். கழக ஆட்சியை தமக்கான ஆட்சி என போற்றி மகிழ்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்மாதிரியாக தமிழகத்தை மாற்றிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும்,தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுடைய உழைப்பினால் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றிட இரவு,பகல் பாராது கண் துஞ்சாது தமிழக மக்கள் நலனே,தமது நலன்,மக்களின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சி என்று உணர்வுடன் உழைத்து வருகின்ற நம் தலைவர் அவர்களால் தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டமக்கள், மகளிர்,முதியோர்,பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ,மாணவியர், இளைஞர்கள் நாளும் நலத்திட்டங்களைப் பெற்று வருகிறார்கள்.முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பண்புகளை போற்றி மகிழ்கிறார்கள். தமிழகத்தில் 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் இருண்ட காலத்தில் இருந்து தங்களுக்கு விடியலை ஏற்படுத்தி தந்து,நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன் மாதிரியாக தமிழகத்தை மாற்றி தரும் நம்முடைய முதல்வர் என மகிழ்ச்சி அடைகிறார்கள். ஒன்றிய அரசுக்கு சாமரம் வீசும் அ.தி.மு.க.வின் அடிமை ஆட்சியின் காட்சியை மாற்றி சுயமரியாதை சுடரை பரப்பி “திராவிட மாடல்” ஆட்சியினை நடத்திவரும் முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும்,பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.



தமிழ்நாட்டில் தான் ஆட்சி செய்த போது ஏழை,எளிய,பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள்,மகளிர்,முதியோர், பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்,இளைஞர்களுக்கு நாளும் நலத்திட்டங்களை தந்து ஆட்சி செய்து வந்த நாயகர்,செம்மொழி காவலர் என்றும் கலைஞர் என போற்றப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம்,விவசாய கண்காட்சி முதலமைச்சர் “திராவிட மாடல்” ஆட்சியில் விவசாயிகளுக்கு வழங்குகின்ற நலத்திட்டங்களையும் துண்டு பிரசுரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதிகளின் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி சார்பாக ஏற்பாடு செய்து அதில் மாவட்டக் கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொதுக்குழு, உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள்,கிளை,வார்டு கழக நிர்வாகிகள், மாநில,மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்று கலைஞர் அவர்களின் புகழை போட்டியிடவும் முடிவு செய்யப்பட்டு ள்ளது.

நெல்லை மாவட்டத்தில் கடந்த எந்த ஆண்டுகளிலும் இல்லாத அளவிற்கு பருவமழை பொய்த்துவிட்டது.இதன் காரணமாக நெல்,வாழை உள்ளிட்ட அனைத்து பயிர்களும் கருகிவிட்டன. இதனால் விவசாயிகள் பெருந் துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். விவசாயத்தை நம்பி உள்ள விவசாயத் தொழிலாளர்களும் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.எனவே நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க இக்கூட்டம் முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைக்கிறது. மேலும் நெல்லை மாவட்ட விவசாயிகளின் எண்ணத்தை பிரதிபலிக்கும் வண்ணமாக வறட்சி மாவட்டமாக அறிவிக்க முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைத்ததோடு மட்டுமல்லாமல் விவசாயிகளை அழைத்துச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை மனு கொடுத்த நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

அம்பாசமுத்திரம்,இராதாபுரம், நாங்குநேரி ஆகிய 3 தொகுதிகளை 6 பகுதிகளாகப் பிரித்து அதற்கு விவசாயத் தொழிலாளர் அணி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, விவசாயிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் அன்று சொல்வதை செய்வோம்! செய்வதை சொல்வோம்! என்ற கலைஞர் அவர்களின் வழி நின்று கலைஞர் அவர்களால் உழைப்பு! உழைப்பு!என பாராட்டப்பட்ட திராவிட மாடல் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை துவங்கி வைத்தார்கள்.இதன் மூலம் 1.6 கோடி பெண்கள் பயன் பெறுகிறார்கள். இதில் பெரும்பாலான அளவில் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் குடும்பம் பயன்பெற்றுள்ளனர். தங்களுக்கான ஆட்சி என தலைவரை புகழ்ந்து பூரிப்படைகிறார்கள்.சிறப்பு மிக்க இந்த திட்டங்களைத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளராக கணேஷ்குமார் ஆதித்தன் அவர்களை நியமனம் செய்த முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுக்கும்,மாநில இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பரிந்துரை செய்த மாவட்டக் கழக செயலாளர் இரா.ஆவுடையப்பனுக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

நெல்லை கிழக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக ராஜா சங்கரலிங்கம் மற்றும் விவசாயத் தொழிலாளர் அணி தலைவராக அருண் தவசு பாண்டியன் துணை தலைவராக சுடலைமுத்து, துணை அமைப்பாளர்களாக ஐயப்பன்,வெங்கடேசன், ஆச்சியூர் ராமசாமி, சண்முகவேல், சிதம்பரம்,பூதப்பாண்டியன்,குமரகுரு, கருப்பசாமி பாண்டியன், தனகிருபா, முத்துக்குமார், ஆறுமுகம், மணி ஆகியோரை நியமனம் செய்து கழக பணியாற்றிட வாய்ப்பளித்த முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கும்,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அவர்களுக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு மு. நடராசன்
### செப்டம்பர் 22 (2004)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கடல் கடந்து வந்தவர்களுக்கும்

# கருணை ஒளி தந்த கலங்கரை விளக்கம்!

மானத்தைக் காத்திட மரணத்தை எதிர்கொள்ளவும் தயார் என்கிற வீரத்தின் அடையாளமாக, வெள்ளைய ஆதிக்கத்திற்கு எதிராக முதல் புரட்சி வெடித்த வேலூர் மாநகரில் ஜனநாயக வழியில் அறப்புரட்சிகள் பலவற்றை வெற்றிகரமாக நடத்திக் காட்டி வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா செப்டம்பர் 17 அன்று இலட்சக்கணக்கான உடன்பிறப்புகளின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது. இந்த இயக்கம் எனும் பெருங்கட்டடத்தின், வெளியே தெரியாத செங்கற்களாக இருப்பவர்கள் தொண்டர்களே என்பதையும், அவர்களால்தான் 75ஆண்டுகளைக் கடந்து, வலிவோடும் பொலிவோடும் இந்தியாவே எதிர்பார்க்கின்ற வகையிலான செயலாற்றலோடு திகழ்கிறது என்பதையும் கழகத்தின் தலைவர் முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தபோது, எளிய தொண்டர்களால் நிரம்பியிருந்த பவள விழா பொதுக்கூட்ட அரங்கம் கைத்தட்டல்களால் அதிர்ந்தது.







சாதாரணசாமான்ய மக்களுக்கான இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். எளிய பின்னணியும், வலிமையான செயல்பாடும், உறுதிமிக்க தத்துவத் தலைமையும் கொண்டு உருவானதுதான் இந்த இயக்கம். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர், பேராசிரியர் என அன்றைய கழகத்தின் முன்னணித் தலைவர்கள் யாரும் மிட்டாமிராசுகளில்லை. ஆலை அதிபர்களில்லை. ஜமீன் பரம்பரையில்லை. எளியவர்கள்...மிக எளியவர்கள். எளிய மக்களின் ஏற்றத்திற்காக இந்த இயக்கத்தை முன்னெடுத்து, வழிநடத்தியவர்கள். இனம்மொழிபண்பாட்டுத் தளத்தில் நிலவிய ஆதிக்கத்தைத் தகர்த்து மறுமலர்ச்சியை உருவாக்கி, சமுதாய ஏற்றத்தாழ்வுக்கு எதிரான சமூக நீதியை நிலைநாட்டி, கல்விவேலைவாய்ப்பு வாயிலாக பொருளாதார சமத்துவத்தை உருவாக்குவதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம்.

கழனியில் பாடுபடும் தமிழர்களாக இருந்தாலும், கடல் கடந்து வாழும் தமிழர்களாக இருந்தாலும் அவர்களின் நலனுக்காக தொடர்ந்து சிந்தித்து செயல்பட்டு வருகிற இயக்கமாக தி.மு.கழகம் திகழ்கிறது. 1956ஆம் ஆண்டு சிதம்பரம் நகரிலே கழகத்தின் பொதுக்குழு நடைபெறுகிறது. பேரறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நாவலர், கழக முன்னணியினர் பங்கேற்ற அந்தப் பொதுக்குழுவில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், ஒன்பதாவது தீர்மானத்தை முன்மொழிந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

“இலங்கையில் சிங்கள மொழி ஆதிக்க ஆட்சியாளர்கள் அங்குள்ள தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதோடு, சிங்கள மொழி ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த முயலும் போக்கினை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அங்குள்ள தமிழர்களின் விருப்பங்களும், முயற்சிகளும் வெற்றி பெற வேண்டுமென்று இப்பொதுக்குழு மனமார விரும்புவதுடன், தாய்த் தமிழகத்திலுள்ள தமிழர்கள் அனைவரும் தங்களாலான எல்லா ஆதரவையும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறது” என்கின்ற இந்தத் தீர்மானத்தை பேரறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்ற பொதுக்குழுவில் தலைவர் கலைஞரும் அ.பொன்னம்பலனாரும் முன்மொழிந்தனர்.

கழகம் தேர்தல் களத்தில் பங்கெடுக்கத் தொடங்கியது 1957 பொதுத் தேர்தல் முதல்தான். அதற்கு முந்தைய ஆண்டே இலங்கைத் தமிழர் நலன் காக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்காகப் பாடுபட்டது. கழகம் பங்கேற்ற முதல் பொதுத்தேர்தலில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையிலும்கூட இலங்கை, பர்மா, மலாயா நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலையினை சுட்டிக் காட்டி, தமிழர் நிறைந்துள்ள வெளிநாடுகளில் தமிழர்களே தூதுவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

தன்னால் ஆன ஆதரவையும், ஒன்றிய அரசாங்கத்தின் சட்ட விதிகளுக்கு உட்பட்ட உரிமைகளையும் கடல் கடந்து வாழும் தமிழர்களுக்கு கிடைக்கச் செய்திட வேண்டும் என்பதே பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுதிமிக்க நிலைப்பாடாகும். அண்ணா வழியில் அயராது உழைத்து, அரை நூற்றாண்டு காலம் கழகத்தினைக் கட்டிக்காத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோதும், எதிர்க்கட்சியாக இருந்த போதும் இலங்கைத் தமிழர் நலன் காக்க எடுத்த முயற்சிகள் அந்த மக்களுக்கு நல்ல விளைவுகளை அளித்தன.

1983ல் இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப் படுகொலைக்கு எதிராக தலைவர் கலைஞர் முன்னெடுத்த எழுச்சிமிக்க போராட்டங்கள்பேரணிகள், அதில் இன்றைய கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் அன்று இயங்கிய கழக இளைஞரணியின் பங்கெடுப்பு, கலைஞரும் பேராசிரியரும் ஈழத்தமிழர் நலன் காக்க தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துச்சமெனத் தூக்கி எறிந்தது, தமிழர் நலன் காக்க சிறைவாசம், ஈழப் போராளிகளை ஒருங்கிணைத்துஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சியாக அனைத்திந்திய தலைவர்களைப் பங்கேற்கச் செய்த மதுரை டெசோ மாநாடு, மனித சங்கிலிப் போராட்டங்கள், நிதியளிப்புக் கூட்டங்கள், நிவாரண உதவிகள் எனத் தன்னால் ஆன அனைத்தையும் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அது மட்டுமா? ஈழத்தமிழர் நலனில் காட்டிய அக்கறைக்காக ஆட்சியையே இழந்தவர். அவரது ஆட்சியைக் கலைத்தவர்களும் அவர்களின் அடிவருடிகளும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியல் வியாபாரமாக்கி அதிகாரத்தைப் பெறவும், வயிறு வளர்க்கவுமாக இருந்த நிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் மட்டுமே உண்மையான அக்கறையுடன் இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை செலுத்தினார். அகதிகளாகத் தாய்த் தமிழ்நாட்டுக்கு வந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களை மேம்படுத்தினார். அவர்களுக்கு தொழிற் கல்வி, மருத்துவக் கல்வி ஆகியவை கிடைத்திடச் செய்தார். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட அரசின் திட்டங்களை முகாம்களில் வசிப்பவர்களுக்கும் வழங்கினார்.

பேரறிஞர் அண்ணா காலத்தில் தொடங்கி, தலைவர் கலைஞர் காலத்தில் தொடர்ந்த இலங்கைத் தமிழர்கள் மீதான திராவிட முன்னேற்றக் கழகத்தின் உண்மையான அக்கறை, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் மனிதநேயத்தின் அடையாளமாக வெளிப்பட்டு வருகிறது. 2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமிழ்நாட்டில் உள்ள 106 அகதிகள் முகாம்களை, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் எனப் பெயர் மாற்றம் செய்தது திராவிட மாடல் அரசு.

அந்த முகாம்களில் வசிக்கும் ஏறத்தாழ 60ஆயிரம் இலங்கைத் தமிழர்கள், முகாம்களுக்கு வெளியே வசிக்கும் 30ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் ஆகியோரின் நலன் காத்திட தமிழ்நாடு அரசின் சார்பில் இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழுவை அமைத்து உத்தரவிட்டார் முதலமைச்சர். மறுவாழ்வு முகாம்களில் உள்ள வீடுகள், இதர கட்டமைப்புகள், அங்கு வசிப்போரின் வாழ்வாதார மேம்பாடுகள் ஆகியவற்றுக்காக 317 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்து அறிவித்தது திராவிட மாடல் அரசு.

சொல்லை செயலாக்குவது, அந்தச் செயலை முழுமையாக்குவது என்பதில் உறுதி வாய்ந்த தலைவரான முதலமைச்சர் அவர்கள் 2021ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாள் வேலூர் மாவட்டம் மேலமொணவூரில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தினார். அதே மாதத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மறுவாழ்வு முகாம்களி லும் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கின.




**கோவி.லெனின்**

மூத்த பத்திரிகையாளர்

தமிழ்நாடு அரசின் இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழு உறுப்பினர>


ஒவ்வொரு முகாமிலும் 35 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருபவர்களும் இருக்கிறார்கள். இலங்கைப் போர்ச்சூழல் காரணமாக, குழந்தைப் பருவத்தில் இங்கே வந்து, வளர்ந்து, திருமணமாகி, தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்திருப்பவர்களும் உண்டு. கைக்குழந்தையாகப் பேரன்பேத்தியைக் கொஞ்சுபவர்களும் இருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கை என்பது, வீடு போன்ற தகரக் கொட்டகைகளில்தான்.

தங்களின் தாய் நிலத்தை இழந்தவர்கள், தாய் நாட்டை மறந்தவர்கள், தாய்நாட்டையே அறியாதவர்கள் என மூன்று தலைமுறையினருக்கும் தாய் நிலமாகத் திகழ்வது நம் அன்னைத் தமிழ்நாடுதான். அந்தத் தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் அண்ணனாக, அன்னையாகத் தங்களைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை திராவிட மாடல் ஆட்சியில் இலங்கைத் தமிழர்களுக்கு உருவானது. அந்த நம்பிக்கை கொஞ்சமும் வீண்போகவில்லை.

சொந்த நிலத்தை இழந்தவர்களுக்கு, வந்த இடத்தில் ஒரு வசிப்பிடமாவது வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாயமல்லவா? அதை நிறைவேற்றித் தருவதில் முனைப்பாக செயல்பட்டது முதலமைச்சர் அவர்கள் தலைமையிலானதிராவிடமாடல் அரசு. சிறுபான்மை நலன் அயலகத் தமிழர்கள் நலன் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி. தமிழரசி, அகதிகளுக்கான ஐ.நா. உயரணைய பிரதிநிதி, ஆய்வறிஞர்கள், பத்திரிகையாளர், அரசியல் சட்ட அமைப்பு வல்லுநர், தொண்டு நிறுவனத்தினர் எனப் பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய ஆலோசனைக் குழு, தமிழ்நாடு அரசின் மறுவாழ்வுத்துறை ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்டு, முதலமைச்சர் தொடங்கி வைத்த பணிகளைத் தொடர்ந்து கவனித்து வந்தது.

ஒவ்வொரு முகாமிலும் உள்ள சூழலுக்கேற்ப கட்டடப் பணிகள் நடைபெற்றன. குறைந்த பரப்பளவில் அதிக வீடுகள் கட்டமுடியாத இடங்களில், அடுக்குமாடி குடியிருப்புகள் அமைக்கலாமா என ஆலோசிக்கப்பட்டது. தங்கள் தாய் நிலத்திலிருந்து வேரோடு பிடுங்கப்பட்ட தாவரம் போன்ற தவிப்பான நிலையில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களோ, “தமிழ்நாட்டிலாவது மண்ணில் அடித்தளம் இருப்பது போல எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு தாருங்கள்.. அடுக்குமாடி குடியிருப்புகள் வேண்டாம்” என்ற கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கைக்கு முதலமைச்சர் செவிமடுத்தார்.

வீட்டின் பரப்பளவும் அதிகரிக்கப்பட்டது. குளியலறையுடன் இணைந்த வீடுகள் கட்டப்பட்டன. அதற்கான கூடுதல் நிதிச் செலவுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. முகாம்களில் புதிய வீடுகளுடன், தரமான சாலைகள், குடிநீர் வசதி, அங்கன்வாடிமையம், குழந்தைகளுக்கான அரங்கு, பூங்கா, நூலகம் ஆகியவையும் கட்டமைக்கப்பட்டன.

பணிகள் தொடங்கிய ஓராண்டுக்குள் திண்டுக்கல் தோட்டனூத்து பகுதியில் 321 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 2022 செப்டம்பர் 14ஆம் நாள் அவற்றை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார் முதலமைச்சர் அவர்கள். அதன் தொடர்ச்சியாக முதல்கட்டமாக கட்டப்பட்டு வரும் 3510 வீடுகளில், 1591 வீடுகளின் பணிகள் இரண்டாண்டுகளுக்குள் நிறைவடைந்த நிலையில், கழகத்தின் பவள விழா நடைபெற்ற வீரமிகு வேலூர் மாவட்டத்தில் உள்ள மேலமொணவூர் மறுவாழ்வு முகாம் மக்களுக்கான 220 வீடுகள் அடங்கிய குடியிருப்பை அதே நாள் காலையில், நேரில் வந்த திறந்து வைத்த முதலமைச்சர் அவர்கள், பயனாளிகளிடம் வீட்டுச் சாவியையும், பாத்திரங்களையும், பசுமை மரக்கன்றையும் வழங்கி புதுவாழ்வுக்கான நம்பிக்கையை அளித்தார். மற்ற மாவட்டங்களில் கட்டப்பட்டிருந்த வீடுகளையும் காணொலி வாயிலாகத் திறந்து வைத்து, பயனாளிகளிடம் உரையாற்றினார்.

சேலம் மாவட்டத்தில் வசித்து வரும் இலங்கைத் தமிழ்ப் பெண்மணி, “எங்க நாட்டுல நடந்த போரால அங்கிருந்து வந்து, 33 வருசமா இங்கே இருக்கோம். எங்களுக்குன்னு சொந்த அடையாளம் கிடையாது. பாதுகாப்பான வீடு கிடையாது. இப்ப எங்களுக்கு நல்ல வீடு கொடுத்திருக்கீங்க. பாதுகாப்பை வழங்கியிருக்கீங்க. ரொம்ப நன்றி முதல்வரய்யா” என்றார். அதுபோலத்தான் மற்ற மாவட்டத்துப் பயனாளிகளின் உள்ளத்து நன்றியுணர்வும் வெளிப்பட்டது. இலங்கைத் தமிழர்களுக்கான நலன்களை வழங்குது தமிழ்நாடு அரசின் கடமை என்பதை தன் வார்த்தைகளில் உணர்த்திய முதலமைச்சர் அவர்கள், “கட்டிக்கொடுத்த வீட்டை நன்றாகப் பரமாரித்து, மகிழ்ச்சியாக வாழுங்கள்” என வாழ்த்தினார்.

முதல் கட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணியும் விரைந்து நடைபெற்று வரும் நிலையில், இரண்டாவது கட்ட வீடுகளுக்கான தொடக்கப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மறுவாழ்வு முகாம் என்று பெயரை மாற்றிய முதலமைச்சர், அந்த முகாமில் வசிக்கும் மக்களுக்கு வீடு, மாத உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, உணவுப் பொருட்கள், பாத்திரங்கள், சமையல் எரிவாயு, உடைகள், மகளிர் சுயஉதவிக் குழு, திறன்மேம்பாட்டுப் பயிற்சி என அனைத்தையும் வழங்கி பெயருக்கேற்றார் போல மறுவாழ்வு அளித்துள்ளார். அவர்கள் விரும்பினால் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கும், இந்தியாவில் குடியுரிமை பெறுவதற்கும் சட்டரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சொந்த மண்ணில் வேரோடு சாய்ந்து விட்டோம் என்ற வேதனையுடன் இங்கு வந்த தொப்புள் கொடி உறவுகளானத் தமிழ்ச் சொந்தங்களுக்கு, “இந்த மண்ணில் உங்கள் வேர் பதிக்க இடமளிப்போம், உங்கள் வாழ்வு துளிர்த்து மலர நீர் அளிப்போம்” என்று கடல் கடந்து வந்தவர்களுக்கு கருணை ஒளி தரும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார் நம் பெருமைக்குரிய முதலமைச்சர்.

---

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# தமிழ்நாடு முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## கழக நெசவாளர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, செப். 22 -* முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் சிறப்பாக நலத்திட்ட உதவிகளுடன் கொண்டாட நடைபெற்ற நெசவாளர் அணியின் மாவட்ட, மாநகர தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம், தியாகராயர் நகர், அக்கார்டு ஓட்டலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், தலைமை தாங்கினார்.

துணைத் தலைவர் மாநில நெசவாளர் அணி ஓ. ஏ. நாகலிங்கம், வரவேற்றுப் பேசினார்.

மாநில செயலாளர்கள்: எஸ்.எல்.டி.ப. சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, காஞ்சி தி. அன்பழகன், பரணி. கே. மணி, நெல்லை சொ. பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன், துணை செயலாளர்கள்: வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணி மாறன், கோவிந்தசாமி, ஆ.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் / கழக துணை பொது செயலாளர் க. பொன்முடி, கைத்தறி & துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சென்னை (மே) மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்.

சென்னை (மே) மாவட்ட அமைப்பாளர் என். அரவிந்தகுமார் நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திராவிட இயக்கத்தின் முதுபெறும் தலைவரும். தந்தை பெரியாரின் குருகுலத்தில் பயின்று. பேரறிஞர் அண்ணாவின் பாசறையில் வளர்ந்து, தமிழ்த்தாயின் தலைமகன், எழுத்தாற்றல், பேச்சாற்றல், நிர்வாகத் திறமை ஆகியவற்றில் ஆளுமையோடு தன்மான உணர்வுக்கும், சுயமரியாதை சிந்தனைக்கும் வழிவகுத்து நம் ரத்த தோடும். ரத்த நாளங்களோடும் இரண்டறக் கலந்துள்ள தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவர் தன்னுடைய 80 ஆண்டுகால பொது வாழ்க்கையில் 50 ஆண்டுகாலம் கழகத் தலைவராகவும், 13 முறை சட்டமன்ற தேர்தலில் களம் கண்டு வெற்றி வாகை சூடி சாதனை படைத்தவரும், 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று, மாநிலத்தில் அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் திட்டங்களை தீட்டி தன் ஆட்சிக் காலத்தில் அதனை நடைமுறைபடுத்திய இந்திய ஜனநாயக காவலராக திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நலத் திட்டங்கள் வழங்கியும், கழக அரசின் விளக்கியும், அனைத்து மாவட்டங்களிலும் நெசவாளர் அணி சார்பில் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்படு கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக, கண்காட்சி நடைபெறும் இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நெசவாளர் கள் மற்றும் நெசவுத் தொழில் வளர்ச்சிக்காக செய்த நலத் திட்டங்களை விளக்கும் படங்கள் வைக்கப்பட்டு. கழக அரசின் நெசவாளர்களுக்கான எதிர்கால திட்டங்களான ஜவுளி நகரம், ஜவுளிப் பூங்காக்கள் குறித்த காணொலி படங்கள் காட்சிப்படுத்துதல் எனவும், கண்காட்சியில் கலந்து கொள்பவர்கள் பிளாஸ்டிக்கை தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த பருத்தி துணிப்பை களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் “மீண்டும் மஞ்சப்பை திட்டத்திற்கு” வலுசேர்க்கும் விதமாக பருத்தி நூலில் நெசவு செய்யப்பட்ட பைகளில் கலைஞர் நூற்றாண்டு இலட்சினை பொறித்து வழங்கிடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.



சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் உள்ள மாநில செய்தி நிலைய கூட்டரங்கில், நேற்று முன்தினம் (20.09.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் ”இதழாளர் கலைஞர்” என்ற குழுவின் ஆலோசனைக் கூட்டம், இக்குழுவின் தலைவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சருமான மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும், உறுப்பினர் செயலருமான த. மோகன், உறுப்பினர்கள். இந்து ராம், நக்கீரன் கோபால், கே.வைத்தியநாதன், விஜய் சங்கர், பாபு ஜெயக்குமார், அருண்ராம், கோவி. லெனின், மு. குணசேகரன், செந்தில்வேலன் (வேல் வீச்சு) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## 2024-நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பூத் வாரியாக கழக செயல் வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



2024-ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்காக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பகுதி - ஒன்றிய - நகர- பேரூர்களில் அடங்கியுள்ள வாக்குச்சாவடிகளில் உள்ள கழகத்தினர் அனைவரையும் ஒருங்கிணைத்து பூத் வாரியாக செயல் வீரர்கள் கூட்டம் நடத்துவதற்காக மாவட்ட கழகத்தின் சார்பில் பிரதிநிதி ஒருவர் அனுப்பி வைக்கப்பட உள்ளார்.

மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் முன்னிலையில் பூத் வாரியாக கழக செயல் வீரர்கள் கூட்டம் கீழ்க்காணும் விவரப்படி நடைபெற உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

**28. ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி**
**திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி**

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | 1 - 27 | 27 | எம்.எஸ்.கே.இப்ராகிம்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 28-44, 56-67 | 29 | கீதா ஆனந்தன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 45 - 55,125- 136<br>165 - 168 | 27 | இரா.பாஸ்கரன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 137 - 164 | 28 | ஆர்.டி.பூபாலன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 2 | கன்டோன்மெண்ட் நகரம் | 173 -207 | 35 | கோல்டு டி. பிரகாஷ்<br>மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் |
| | | 208 -224 | 17 | ஜெயராம் மார்த்தாண்டன்<br>மாவட்ட வர்த்தர் அணி அமைப்பாளர் |
| 3 | கவுல்பஜார் ஊராட்சி | 169 - 172 | 4 | கண்டோன்மெண்ட் சி. முத்து |
| 4 | மூவரசம்பட்டு ஊராட்சி | 390 - 401 | 12 | மாவட்ட பிரதிநிதி |
| 5 | ஆலந்தூர் வடக்கு பகுதி | 68 -99 | 32 | டி.எஸ்.எம்.ஜெயகரன்,<br>மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர்<br>நங்கநல்லூர் வேல்முருகன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 111 - 124 | 14 | ப.குமரவேல்<br>மாவட்ட விவசாய அணி தலைவர் |
| | | 100-110 | 11 | பழவந்தாங்கல் சுந்தரராஜன்<br>பகுதி கழக அவை தலைவர் |
| | | 225 - 238<br>276 - 278 | 17 | பழவந்தாங்கல் ரமேஷ்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 3239 -241, 244, 245,<br>246, 248 269-284,307 | 21 | தி.க.பாஸ்கரன், மாவட்ட<br>ஆதிதிராவிட நல அணி அமைப்பாளர் |
| 6 | ஆலந்தூர் தெற்கு பகுதி | 285 - 305,333 | 22 | ஜி.ஆர்.வெங்கடேசன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 242,243,247,<br>249 - 259, 261,267,<br>268, 306,308-311 | 22 | த.அன்பழகன்<br>மாவட்ட மருத்துவரணி<br>துணை அமைப்பாளர் |
| | | 322 - 327, 331, 332,<br>334, 335, 341 - 347,<br>350 - 352 | 20 | திருமாறன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 260, 262 - 266, 312 - 321,<br>328 - 330 | 19 | ஆதம்பாக்கம் மனோகரன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 336 - 340, 359 - 373,<br>376, 386 | 22 | பாபுகுமார்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 348, 349, 353 - 358<br>374, 375, 377 - 385<br>387 - 389 | 22 | முகலிவாக்கம் கோட்டீஸ்வரன்<br>பகுதி கழக துணை செயலாளர் |

**29. திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி**
**திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி**

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | 1 - 30 | 30 | அமரம்பேடு ரமேஷ்<br>மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் |
| | | 31 - 47 | 17 | ஜி.ஏ. ராயப்பன், மாவட்ட சிறுபான்மை<br>அணி துணை அமைப்பாளர் |
| 2 | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | 44 -48,53 - 57<br>276 - 293 | 28 | ஜெ. சிவபாதம், திருப்பெரும்புதூர்<br>வடக்கு ஒன்றிய அவை தலைவர் |
| | | 81 -102, 272-275<br>294-296 | 29 | எம். மணிவண்ணன்<br>திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய பொருளாளர் |
| 3 | திருப்பெரும்புதூர் பேரூர் | 58 - 80 | 23 | பொடவூர் ரவி<br>மாவட்ட இலக்கிய அணி தலைவர் |
| 4 | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | 103-117,248-261 | 29 | மா. கணேஷ்பாபு<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 118-132,262-269<br>337-344, 351-352 | 33 | செந்தில் தேவராஜ், மாவட்ட விவசாய<br>தொழிலாளர் அணி அமைப்பாளர் |
| | | 133-138,172-179<br>345-350, 353-361 | 29 | ப. ராமமூர்த்தி, மாவட்ட இளைஞரணி<br>துணை அமைப்பாளர் |
| | | 222-237, 316-319,<br>325-336 | 32 | ச.வேலுமணி<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 238-247, 270, 271<br>297-315, 320-324 | 36 | L.D. ஜார்ஜ், மாவட்ட சிறுபான்மை<br>பிரிவு துணை அமைப்பாளர் |
| 5 | குன்றத்தூர் நகரம் | 180 - 204 | 25 | இரா. பொன்னுராம்<br>தொ.மு.ச. பேரவை செயலாளர் |
| | | 205 - 221 | 17 | மாங்காடு சீனிவாசன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 6 | மாங்காடு நகரம் | 139 -158 | 20 | டி.வி.சரவணன், மாவட்ட நெசவாளர்<br>அணி துணை அமைப்பாளர் |
| | | 159 -171 | 13 | கே.எத்திராஜ்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |

**30. பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி**
**திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி**

| எண் | பகுதி – ஒன்றியம் | பாகம் எண்கள் | பூத் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | பம்மல் வடக்கு பகுதி (அனகாபுத்தூர் & திருநீர்மலை) | 1-10, 12, 14, 21, 23,<br>29-34, 38, 45-49 | 26 | மு.ரஞ்சன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 11, 13, 15-20, 22, 24-28,<br>35-37, 40-42, 50 | 21 | பேராசிரியர் எல்.பிரபு<br>மாவட்ட மாணவரணி அமைப்பாளர் |
| | | 399-437 | 39 | ப. டில்லி, மாவட்ட பிரதிநிதி |
| 2 | பம்மல் தெற்கு பகுதி (பம்மல்) | 39, 43, 44, 314-317<br>327-340, 348-357,<br>360-362, 370 | 35 | கோ.காமராஜ்<br>தாம்பரம் மாநகர அவைதலைவர்-<br>துணை மேயர் |
| | | 318, 319, 321, 322,<br>341-347, 358, 359,<br>363-366, 371-376, 382, 385 | 25 | சி.பார்த்தசாரதி<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 320, 323-326, 367-369,<br>377-381, 383, 384, 386-398 | 28 | ராமச்சந்திர ராஜா<br>மாநகர பிரதிநிதி |
| 3 | பல்லாவரம் வடக்கு பகுதி | 103-119, 143-147,150-154,<br>167,168,291,297,299,301,<br>304,307,308 - | 36 | இரா.நரேஷ்கண்ணா<br>தாம்பரம் மாநகர<br>துணை செயலாளர் |
| | | 120-142,265-268,276,277,<br>279,283,287, 288 | 33 | ச.பிரபு, தாம்பரம் மாநகர<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| 4 | பல்லாவரம் தெற்கு பகுதி | 162-166, 169-175,178,179,<br>189-192, 272-275, | 25 | ந.மூவேந்தன், மாவட்ட கலை<br>இலக்கிய பேரவைத் தலைவர் |
| | | 269-271, 278,284-286, 289,<br>290, 292-296,298,300, 302,<br>303,305,306,309-313 | 25 | குமரேசன்<br>மாநகர பிரதிநிதி |
| | | 148,149,155-161,193-208, | 25 | விக்கி (எ) விக்னேஷ்வரன், மாவட்ட<br>மாணவர் அணி துணை அமைப்பாளர் |
| 5 | செம்பாக்கம் வடக்கு பகுதி | 176, 177, 180-187, 238-240,<br>243-245, 258, 259, 262, 263 | 20 | பி.கே.ஏ. சத்தியபிரபு, தாம்பரம்<br>மாநகர இளைஞரணி அமைப்பாளர் |
| | | 188, 209-221,249, 251,252,<br>255-57,260,261,264 | 23 | துரை இளங்கோவன், பம்மல்<br>தெற்கு பகுதி துணைச் செயலாளர் |
| | | 222-237, 241, 242,<br>246-248, 250, 253, 254 | 24 | தாமோதரன், மாவட்ட ஆதி திராவிட<br>நல அணி துணை அமைப்பாளர் |
| 6 | புனித தோமையர்மலை (பொழிச்சலூர்) | 51-84 | 34 | மு.நி தமிழ்குமரன், மாவட்ட<br>மாணவரணி மு. து. அமைப்பாளர் |
| | புனித தோமையர்மலை (திரிசூலம்) | 89-102 | 14 | சி.ரஞ்சித், மாவட்ட விளையாட்டு<br>மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் |
| 7 | சென்னை மாநகராட்சி மீனம்பாக்கம் வட்டம் | 85-88 | 4 | பப்பிதா, பம்மல் வடக்கு பகுதி<br>துணை செயலாளர் |

**31. தாம்பரம் சட்டமன்றத் தொகுதி**
**திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி**

| எண் | பகுதி – ஒன்றியம் | பாகம் எண்கள் | பூத் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | பெருங்களத்தூர் வடக்கு பகுதி | 1-36 | 36 | வ. விஜயரங்கம் (எ) கண்ணன்<br>தாம்பரம் மாநகர பொருளாளர் |
| | | 37-40, 69-80, 82-84,89-91,<br>96-100,170-172, 202, 203,204 | 33 | சா.லட்சுமிபதி ராஜா, செம்பாக்கம்<br>தெற்கு பகுதி துணைச் செயலாளர் |
| 2 | பெருங்களத்தூர் தெற்கு பகுதி | 81, 85-88, 92-95,<br>101-109, 269-349 | 32 | க.தேவேந்திரன்<br>தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் |
| | | 81,85-88,92-95, 101-109,<br>310-310, 314-319,321,324 | 36 | க.ராமசந்திரன், செம்பாக்கம்<br>தெற்கு பகுதி அவை தலைவர் |
| | | 311-313, 320, 322, 323,<br>325-349 | 31 | ஷாஜகான், மாவட்ட சிறுபான்மையினர்<br>அணி துணை அமைப்பாளர் |
| 3 | தாம்பரம் மேற்கு பகுதி | 41-68, | 28 | ஆர்.எஸ்.சங்கர்<br>தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் |
| | | 110-134 | 25 | பொன். சதாசிவம், தாம்பரம்<br>மாநகர துணைச் செயலாளர் |
| | | 135-144,<br>147-156,160 | 21 | சுதாகர், மாவட்ட தொண்டர்<br>அணி துணை அமைப்பாளர் |
| 4 | தாம்பரம் கிழக்கு பகுதி | 145-146, 157-159, 166-169,<br>249-252, 261-268, 380-383,<br>396,401,409-411 | 30 | க.வசந்தகுமாரி<br>தாம்பரம் மாநகராட்சி மேயர் -<br>மாநகர துணைச் செயலாளர் |
| | | 161-165, 374-379, 384-395,<br>397-400, 402-408, | 34 | வ.க.ரவி, பெருங்களத்தூர்<br>தெற்கு பகுதி துணைச் செயலாளர் |
| 5 | செம்பாக்கம் தெற்கு பகுதி | 174-180, 182, 184-201,205, 206, | 28 | தாம்பரம் நாராயணன்<br>மாவட்ட அமைப்புசார ஓட்டுநர்<br>அணி அமைப்பாளர் |
| | | 173,181,183,207-228, 230, | 26 | வழக்கறிஞர் நடராஜன்<br>மாவட்ட வழக்கறிஞர் அணி<br>துணை அமைப்பாளர் |
| | | 229,231-248,253-260, | 27 | மு.ஸ்ரீதர், பம்மல் வடக்குப் பகுதி<br>துணைச் செயலாளர் |
| 6 | புனித தோமையர்மலை (4 ஊராட்சிகள்) | முடிச்சூர்-350-369 -20 பூத்<br>திருவஞ்சேரி-370-373 -4 பூத்<br>அகரம்தென்-412-424 -13 பூத்<br>மதுரபாக்கம்- 425-427 -3 பூத் | 40 | ஆதிமாறன்<br>தலைமைச் செயற்குழு உறுப்பினர் |

**32.செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி**
**காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதி**

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | 1-34 | 34 | எஸ்.ஆல்பர்ட், மாவட்ட<br>சிறுபான்மையின அணி அமைப்பாளர் |
| | | 35-43, 49-54, 266-276 | 26 | நந்திவரம் சம்பத்குமார்<br>மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு<br>பேரவை துணை அமைப்பாளர் |
| | | 75-94, 97, 118, 121-126 | 28 | அரங்க கிரிச்சந்திரன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 44-48, 55-58, 95, 96, 98-100<br>101-117, 119,120 | 33 | வி. ராஜேந்திரன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 59-74 | 16 | இரா. கருணாநிதி, மாவட்ட பிரதிநிதி |
| 2 | காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் | 174-176, 340-347, 408-411<br>425, 429, 431,432, 437-439 | 22 | க. அன்புசெல்வன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் |
| | | 292-304, 308-314 317-319 | 23 | ஊரப்பாக்கம் தமிழ்செல்வன் |
| | | 186-192,277-291 | 22 | ஜிஜேந்திரன் ராமு<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 305-307, 412-424, 426-428,<br>430, 433-436 | 24 | பெப்சி கண்ணன், மாவட்ட<br>தொழிலாளர் அணி அமைப்பாளர் |
| 3 | கூடுவாஞ்சேரி நகரம் | 127 - 157 | 31 | டி.கே.கமலகண்ணன், மாவட்ட<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| | | 158-185 | 28 | த.விநோத்குமார், மாவட்ட<br>பொறியாளர் அணி அமைப்பாளர் |
| 4 | மறைமலைநகர் நகரம் | 193-220 | 28 | ஆர். ராஜி, மாவட்ட பிரதிநிதி |
| | | 221-241 | 21 | ஜெ. ஆறுமுகம், மாவட்ட பிரதிநிதி |
| | | 242-265 | 24 | மணிகண்டன், மாவட்ட<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| 5 | செங்கல்பட்டு நகரம் | 348 - 377 | 30 | செ.அருள்தேவி, தலைமை<br>பொதுக்குழு உறுப்பினர் |
| | | 378-407 | 30 | கே.பி.ராஜன். செங்கல்பட்டு<br>தொகுதி தகவல் தொழில்நுட்ப<br>அணி ஒருங்கிணைப்பாளர் |

**33. திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி**
**காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதி**

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | 24-37, 51-65<br>69-77 | 38 | எஸ். அஸ்கர் அலி<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 1-23, 38-42, 47-50 | 32 | மு. செல்வகுமார், தலைமை<br>பொதுக்குழு உறுப்பினர் |
| | | 43-46, 78-96, 98, 99,113-117 | 30 | பா. ஞானபிரகாசம், மாவட்ட<br>விவசாய அணி அமைப்பாளர் |
| 2 | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | 66-68, 97, 100 - 112,131- 143 | 30 | வி. விஜயகுமார், மாவட்ட<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| | | 144-163 | 20 | கோவிந்தன், மாவட்ட மீனவரணி<br>துணை அமைப்பாளர் |
| | | 164-185 | 20 | கௌரிசங்கர், திருப்போரூர் வடக்கு<br>ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் |
| 3 | திருப்போரூர் பேரூர் | 118 - 130 | 13 | ஜி.சி.அன்புசெழியன். தலைமை<br>செயற்குழு உறுப்பினர் |
| 4 | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | 186 - 211 | 26 | ஆசிரியர் பழனி. மாவட்ட நெசவாளர்<br>அணி துணை அமைப்பாளர் |
| | | 212-224,250-253 | 17 | திருமலை. திருக்கழுக்குன்றம்<br>தெற்கு ஒன்றிய அவை தலைவர் |
| | | 256-268,282-297 | 29 | டி. ஜெயச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி |
| | | 298-309 | 12 | எம்.சி.ராகவன், மாவட்ட விவசாய<br>அணி துணை தலைவர் |
| 5 | திருக்கழுக்குன்றம் பேரூர் | 225 - 249,254 - 255 | 27 | கே.ரவிக்குமார், மாவட்ட<br>தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் |
| 6 | மாமல்லபுரம் நகரம் | 267 - 281 | 13 | மடையத்தூர் சுப்பிரமணியன்<br>மாவட்ட பிரதிநிதி |

மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் அனைவரும் உடனடியாக அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதி - ஒன்றிய - நகர- பேரூர்களுக்கு சென்று, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர- பேரூர் செயலாளர்களுடன் கலந்து பேசி, பூத் கமிட்டி செயல் வீரர்கள் கூட்டம் நடத்துவதற்கான தேதி, நேரம், இடம் ஆகியவற்றை அட்டவணையாக பட்டியலிட வேண்டும்.

பின்னர் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் -நேரங்களில் பூத் செயல் வீரர்கள் கூட்டத்தை நடத்துவதற்காக, அந்தந்த வார்டு செயலாளர்களுடன் கலந்தாலோசனை செய்து, பூத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரின் பெயரும் இடம் பெறும் வகையில் பூத் செயல் வீரர்கள் கூட்ட அழைப்பிதழை முறையாக அச்சிட ஏற்பாடு செய்து, அந்த அழைப்பிதழை அந்த வாக்குச்சாவடியில் உள்ள கழகத்தினர் அனைவருக்கும் அளித்திட உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச் சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் அனைவரையும் இந்த பூத் செயல்வீரர்கள் கூட்டத்தில் இணைந்து பங்கேற்கச் செய்யும் வகையில், வாக்குச்சாவடி வாரியாக பூத் கமிட்டி செயல் வீரர்கள் கூட்டத்தை மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் கூட்டி, கழகத்தினர் அனைவரையும் ஒருங்கிணைத்து நாடாளுமன்ற தேர்தல் பணிகளை முடுக்கி விட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

# மதுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றுச் சிறப்பித்த நிகழ்ச்சிகள்!




கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை வடக்கு மாவட்டக்கழகம் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க மதுரை மேலூருக்கு வருகை தந்தபோது, அவருக்கு சாலையின் இருபுறமும் திரண்டு நின்று எழுச்சியும், உற்சாகமும் மிகுந்த வரவேற்பை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கழகத்தினர் அளித்தனர்.




கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மதுரை வடக்கு மாவட்டக்கழகம் சார்பில், கழக மூத்த முன்னோடிகள் 1,600 பேருக்கு தலா ரூ.10,000 பொற்கிழி வழங்கினார். மேலும், இந்த நிகழ்வில் பாக முகவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




கலைஞர் நூற்றாண்டில், அண்ணா பிறந்த நாளில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், கண்ணகி நீதிகேட்ட மாமதுரையில், மாதம் ரூ.1000 வழங்குகிற வகையில், 500 மகளிருக்கு டெபிட் கார்டுகளை - கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசின் முத்திரை திட்டங்களில் ஒன்றாக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை வளாகத்தில், ரூ.291 கோடி செலவில் 6 தளங்கள் மற்றும் நவீன அறுவை சிகிச்சை வசதிகள் கொண்ட மருத்துவமனை கட்டடம் கட்டப்பட்டு வரும் பணிகளை நேரில் ஆய்வு செய்தார். கட்டுமானப் பணிகள் முடிகிற தருவாயில் உள்ள நிலையில், மருத்துவமனையில் அமையவுள்ள வசதிகள் குறித்து அதிகாரிகள் மற்றும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



மதுரையைச் சுற்றியுள்ள 5 மாவட்டங்களுக்கான சிறார் கூர்நோக்கு இல்லம் மதுரை மாநகரில் செயல்பட்டு வருகிறது. அந்த இல்லத்துக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள சிறுவர்களுக்கு வழங்கப்படும் உணவு, உடை போன்ற அடிப்படை வசதிகள் குறித்தும், அங்குள்ள சமையலறை, படுக்கை அறைகள், கழிப்பறைகளுக்குச் சென்று அவை சுகாதாரமாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்தார்.

# திராவிட சினிமா

24

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**



படங்கள் உதவி : ஞானம்



## ‘பூமாலை’ காட்டும் திராவிடச் சிந்தனை!

1965-ஆம் ஆண்டு மேகலா பிக்சர்ஸ் சார்பில், முரசொலி மாறன் அவர்களின் தயாரிப்பாக வெளிவந்தது ‘பூமாலை’ திரைப்படம்.

கலைஞரின் கதை, திரைக்கதை வசனத்தில் உருவான திரைப்படத்தை, சுதர்சனம் இசையில், அமிர்தம் அவர்களின் ஒளிப்பதிவில், ப.நீலகண்டன் இயக்கியிருந்தார். எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரி, அஞ்சலிதேவி, எஸ்.ஏ.அசோகன், நாகேஷ், மனோரமா மற்றும் பலர் நடித்திருந்தனர்.

பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி ஒரு குழந்தையையும் ஈன்றெடுக்க நேரும் இளம்பெண்ணின் கதை. இந்த ஒற்றை வரிக்கதையை கலைஞரின் திரைக்கதை கையாண்டிருக்கும் விதம், திரைப் படத்தைச் சமூக மாற்றத்துக்கான கருவியாகக் கையாள எண்ணுவோருக்கு ஒரு கையேடு.

### பூமாலையின் முன்னிருந்த வழிகள்

ஒரு பெருமழை பெய்யும் வெளிச்சமற்ற இரவில், முகமறியவியலாத ஆண் மனித மிருகத்தால் பாலியல் வல்லுறவுக்கு ஆளான பெண்ணின் கதையை அந்தப் புள்ளியிலிருந்து நகர்த்தும் வழிகளை யோசித்துப் பாருங்கள். அவள் முன் இருக்கும் வழிகளில் முதலாவது உயிரை மாய்த்துக் கொள்வது.

அதைவிடுத்து வீடு திரும்பி, தான் கர்ப்ப மடைந்திருப்பதும் தெரிய வந்தால், அவளுக்கான வாய்ப்பு என்ன? அவளது கையறு நிலையைக் கருதாது அவதூறும் பழியும் பேசும் குடும்ப உறுப்பினர்கள் அவளை எப்படி எதிர்கொள்வார்கள்?

பூமாலை மீது அன்பும், மாறாத நம்பிக்கையும் கொண்ட அப்பாவும் அண்ணனும் அவளது அவலநிலையை முற்றாகப் புரிந்து கொள்கிறார்கள். அப்பா, ‘அறியாமல் நடந்ததற்கு நீ பொறுப்பல்ல, உயிர்துறப்பது தவறு. நீ வாழ்ந்துதான் ஆக வேண்டுமென’ உறுதியாகப் பேசி, அவளது அண்ணனிடம் அதற்கான பொறுப்பையும் கொடுத்துவிட்டு உயிர்விடுகிறார்.

குழந்தைப் பிறப்பை ரகசியமாக்கி, அதையும் கைவிட்டு தங்கையை வாழ வைக்க முயல்கிறான் அண்ணன். எதிர்பாராத திருமண உறவில் ஈடுபட முடியாமல் தவிப்பவளிடம், குழந்தை மீள்கிறது.

இந்தத் திருப்பங்களில், அவளது வாழ்வின் அசாதாரண நிலையறிந்து, அவளுக்கு உறுதுணையாக இருக்கிறார் கணவனின் விதவை அக்கா. ஆனால், ஊரார் அவதூறு பழியை அவள் மீது சுமத்துகின்றனர். அக்காவின் உயிர்த் தியாகத்தில் முடிச்சுகள் அவிழ்கின்றன.

### கலைஞர் காட்டிய நவீனம்

காலத்துக்கேற்றாற் போல தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் திறன் கொண்டவர் கலைஞர். ஆனால், தகவமைத்துக் கொள்ளுவது கருத்து சமரசத்தில் அல்ல. மாறாக, தனது சீர்திருத்தச் சிந்தனைகளைச் சொல்லும் முறையை மாற்றுவது. அது அடிப்படையாக ஒரு படைப்பாளியின் பண்புதான் எனக் கடந்துவிட முடியாது.

தங்களது கொள்கை நிலைப்பாடுகளில் தடுமாறித் தடம் புரண்டவர்கள் ஏராளம். கேட்டால், இந்து தத்துவ விசாரங்களின் ஆழமறியாமல் ஒருநாளில் செய்த பிழை எனக் கடப்பதோடு, பகுத்தறிவு- சுயமரியாதைச் சிந்தனைகளைப் பகடி பேசி, பிழைத்துத் தொலைப்பார்கள். எவ்வளவு வெளிப்படையாகச் சொன்னாலும், தன் பிற்போக்குச் சிந்தனைகளின் சாராம்சத்தைக் கைவிட முடியாது என அகம்பாவம் பேசிய ‘மௌனி’களே இங்குத் தமிழ் நவீனத்தின் உன்னத அடையாளங்கள் ஆயினர்.

அன்றும் இன்றும் பார்ப்பனிய மனோபாவத்தின் பிடியிலிருந்து விலக முடியாமல் இருக்கும் குறுங்குழுவினர் ‘நவீனத்தை’ தேன் தடவிய வார்த்தைகளில் மொழியப்பட்ட ’உன்னத இலக்கிய’ பம்மாத்துகளில் பாரம்பரியம் / மரபு எனும் வாதங்களில் முன் வைக்கின்றனர்.

அவர்களின் பழைமையான முடைநாற்றத்தின் கொண்டாட்டத்தை ‘கலை கலைக்காகவே‘ எனும் வாதத்தில் வளைத்தனர். கலையின் அரசியல் இயக்க விசை அறியாதவர்கள் ஏமாறலாம், ஆனால் ‘அரசியலற்ற கலை’ என்ற ஒன்று ஒரு போதும் இருக்கவியலாது என்ற புரிதல் கொண்டவரிடம் இந்த வாதம் காலத்தில் தூளாகிப் போனது. அவர்களின் ‘கலை உன்னதம்’ சனாதனக் கோடாரிகளுக்குச் சாணை பிடித்த வேலையென இப்போது அம்பலமாகிப் போனது.

### கலை கலைக்காகத்தானா?

திரைப்படத்திலும் நேரடியாகவும் ‘கலை கலைக்காக’ என்ற அபத்தம் பேசப்படுகிறது. சுந்தரம் சொல்கிறான், ‘கலை கலைக்காக மட்டும்தானாம்’ என்கிறார்கள் சில ‘பெரியவர்கள்’ என்று. அக்கா பதிலிறுக்கிறாள், ‘அது எப்படி இருக்க முடியும். விளக்கு விளக்குக்காக மட்டுமே இருக்க முடியுமா? வெளிச்சம் தர வேண்டாமா? அது மாதிரி கலையும் மனித சமுதாயத்துக்குப் பயன்படணும்’ என்று.

> **விளக்கு விளக்குக்காக மட்டுமே இருக்க முடியுமா? வெளிச்சம் தர வேண்டாமா? அது மாதிரி கலையும் மனித சமுதாயத்துக்குப் பயன்படணும்!**

கலை கலைக்காக வாதத்தின் அடிப்படை ‘கலை’ அதன் உன்னதத்தின் உச்சியில் ’வாசகனை’ உச்சரிக்கப்படாத வார்த்தைகளின் வழி உரையாடல் நிகழ்த்தி, அவனை உச்சாணியில் ஏற்றி விடும் என்பதே. உச்சாணியில் ஏறியவன் வாய் திறந்து, ‘உன்னதச் சனாதனமும்’, ‘சுயசாதி பெருமிதமும்‘ பேசும் போதுதான் உரையாடல் வழியாகக் கடத்தப்பட்ட ‘உன்னதம்’ அம்பலமாகும்.

### ஆணின் தவறு... பெண்ணுக்குத் தண்டனை...

சுந்தரத்துக்கு ரவி என்றொரு நண்பன். பகுத்தறிவாளன், கலை, இலக்கியம், பண்பாடு என வாழ்பவன். ‘உன்னையே நீ எண்ணிப் பார்‘ என நூல் எழுதி ‘அக்காவுக்கு’ காணிக்கையாக்குபவன்.

திரைக்கதையின் கவனம் முற்றாக அந்தப் பெண்ணின் இருப்பு மீதே. அவளின் வலியும் வேதனையும், கிடுக்கியில் மாட்டிக் கொண்ட நிலையுமே பேசப்படுகிறது. அதிலும் தாய்மைப் பேறின் பிடியிலிருந்து மீள முடியாமலும், கன்னியான புதிய காதல் மனைவி என்ற ‘பாத்திரத்தை’ ஏற்க முடியாமலும் தவிக்கும் போராட்டத்தை அற்புதமாகச் சித்தரித்திருக்கிறார் கலைஞர்.

அதன் தொடர்ச்சியாக ஒரு ஆதரவற்ற குழந்தையின் ‘தாயாகும்‘ அக்காவின் மீது அள்ளி வீசப்படும் மனமலங்களின் குவியலில் அவள் மூழ்குவதும் காட்சியாகிறது. தன் குற்றத்தைப் பகுத்தறிவாள நண்பனிடம் பேசி அதிலிருந்து தன்னை விடுவித்தும் கொள்கிறான் ஆண்.

தான் இழைத்த மாபெரும் கொலைபாதகத்திலிருந்து ‘விடுதலை‘ பெற்று விடும் ஆணின் வாய்ப்பு, எந்தக் குற்றமும் செய்யாத பெண்களுக்கு அறவே மறுக்கப்படுகிறது. ’தவறு செய்வது ஆண், தண்டனை அனுபவிப்பது பெண்’ என்கிறது கலைஞர் வரிகள்.

### அழுவதா திராவிடச் சிந்தனை?

இந்த ஆண் உலகத்தின் அதிகாரத்தை அப்பட்டமாகத் தோலுரிப்பதை, இதைவிட கலைநயமாக எப்படிச் சொல்லி விடுவார்கள். வெகு மக்கள் புரிதலைக் கோரும் திரைப்படம், அதன் மிகச் சிறந்த கருவியான பாடல் வழி உன்னதத்தைக் கடத்தும் விதம் பாருங்கள்...

“பெண்ணே உன் கதி இது தானா உன் பெண்மை ஆண்மைக்குப் பலிதானா உலகே உனக்குச் சுமைதானா உன் உடலே உனக்குப் பகைதானா...”

‘பெண்ணின் உடலே பெண்ணிற்குப் பகைதானா’ என்ற கவிஞர் மாயவநாதனின் வரிகளில், காண முடியாத கலை உன்னதம் என்னவாக இருக்க முடியும்? அதற்காக இந்தப் பெண்கள் கண்ணீர் சிந்தும் செயலற்றவர்கள் இல்லை.

இறுதியில், கணவன், மனைவியையும், அக்காவையும் அவதூறுக்குள்ளாக்கிய கொடூரன் தானே என உணர்ந்து மனைவியிடம், குற்றவுணர்ச்சியின் அவமானத்துடன் கேட்கிறான். “உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய கொடூரன் உன் முன்னால் வந்தால் என்ன செய்வாய்” என்று.

பெண் வெடித்துக் குமுறுகிறாள், ‘அந்த மிருகத்தை இரண்டாகக் கிழித்து எறிந்து விடுவேன்‘ என்று. இதுதான் திராவிடச் சிந்தனை. பெண்களைக் கண்ணீர் சிந்துவோராகக் காட்டி இரக்கம் தேடும் உன்னதங்கள் அல்ல அவை. மாறாக எழுந்து நின்று போராடு, ஆணுக்குச் சமமாக நில் என்பதே..!

...படம் விரியும்

---

## டிஜிட்டலில் 50 ஆண்டுச் ‘செம்மலர்’!



திராவிட இயக்கம் போலவே, பகுத்தறிவு மற்றும் சமத்துவச் சிந்தனைகளை முன்னெடுத்துச் சென்றதில் பொதுவுடைமை இயக்க இதழ்களுக்கும் பங்குண்டு. அவற்றில் முக்கியமான இதழ், சி.பி.எம். கட்சியின் ‘செம்மலர்’ மாத இதழ்.

கடந்த 50 ஆண்டுகளாக அச்சு இதழாக வந்துகொண்டிருந்தது ‘செம்மலர்’. அந்த இதழ்கள் அனைத்தும் தற்போது டிஜிட்டல் மயமாக்கப்பட்டு, அனைவரும் எளிதில் பதிவிறக்கம் செய்து, பயன்படுத்தக் கூடிய வகையில் தெற்காசிய திறந்த மின்னணு ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் பணியை சென்னையில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மேற்கொண்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கருவூலம் இந்தப் பணிகளை ஒருங்கிணைத்தது. 1970-ஆம் ஆண்டு மே முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான 587 செம்மலர் இதழ்கள் கிடைக்கும்.

https://bitly.ws/VeF7

## ஃப்ளாஷ்பேக்



### திருவாரூர் சூட்டிய அறிவுக்கொடி!



சௌந்தரராஜன்

1965-இல் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றதுடன், மொழிப் பற்றுக் கொண்ட ஆசிரியராகவும் எனது பணியை 2006-ஆம் ஆண்டு வரை செய்தேன். 1979-ஆம் ஆண்டு திருவாரூருக்குப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க தலைவர் கலைஞர் வருகை தந்தார். அப்போது மயிலாடுதுறையிலிருந்து, 11 மாதமே ஆன என் மகளை அழைத்துக் கொண்டு தலைவரைச் சந்திக்கச் சென்றேன். அன்னை மணியம்மை அவர்களின் நூற்றாண்டும் அந்த சமயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தலைவர் கலைஞர்தான் என் மகளுக்குப் பெயர் வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். 1.09.1979 அன்று என் மகளுக்கு ‘அறிவுக்கொடி’ என்று பெயர் வைத்தார். ஒரு தமிழாசிரியனாகவும் கலைஞரின் தொண்டனாகவும் பெருமையாக உணர்ந்த தருணம் அது.

**-பா.சௌந்தரராஜன், கிளைச்செயலாளர், குளிச்சார், மயிலாடுதுறை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்


### விவசாயத்துக்கு டிராக்டர்

**1970-ஆம் ஆண்டு கண் சிகிச்சைக்காக லண்டன் சென்றார் கலைஞர். அங்கு சென்ற இடத்திலும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். ஸ்டாண்டர்டு தொழிற்சாலை, டிராக்டர் தொழிற்சாலை, பெட்ரோ கெமிக்கல் தொழில்கள் திறப்பதற்கான ஒப்பந்தங்களில் ஈடுபட்டார். பெர்கூசன் டிராக்டர் தொழிற்சாலையைப் பார்வையிடச் சென்றபோது, அவருக்குப் பரிசாக வழங்கப்பட்ட டிராக்டரை கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்துக்கு அன்பளிப்பாக அளித்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

248




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.